# உள்ளத்தனையது உயர்வு



கலாநிதி. ஆ. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T 1731/1

BT/PADDIRUPPU M.M.V.
LIBRARY
KALUWANCHIKUDY.

சொய்ஸ் பவன்ஸ்
புத்தக விற்பனையாளர்
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பேரன்புக்குரிய

சேர் கந்தையா வைத்தியநாதன்

அவர்களுக்கு இந்நூல்

காணிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தனையது உயர்வு

கலாநிதி ஆ. கந்தையா
எம். ஏ. (சென்னை), பி. எச்டி. (இலண்டன்).
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்

காந்தளகம்

யாழ்ப்பாணம் சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை பதிவு

முதற் பதிப்பு: மாசி 1984.

விற்பனை உரிமை: காந்தளகம், 213, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.
12, கோவிந்தன் தெரு, சென்னை 600 029.

Rs 20.50

Copyright reserved

ULLATTANAIYATHU UYARVU
by Dr. A. Kandiah
First Edition Feb. 1984, 110 pp Crown Octavo (7 1/2 × 5 1/2)
Printed at Sri Kantha Press, 213, K. K. S. Road, Jaffna.
Published by Kaanthalakam, Jaffna and Madras.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நூலிற் பதினொரு கட்டுரைகள் இடம் பெறுகின்றன. மாணவனாகவும் ஆசிரியனாகவும் ஆராய்ச்சியாளனாகவும் இருந்த காலங்களிலே நிகழ்ந்தவற்றைக் கட்டுரை வடிவிலே தருகின்றேன்.

பேரன்புக்குரிய பேராசிரியர் மு. வரதராசனார் அவர்களுடன் கொண்டிருந்த தொடர்பாலே உருவானது 'கறி சாப்பிடுவாயா?' என்ற கட்டுரை. பச்சையப்பன் கல்லூரியிலே கலைமாணிப் பட்ட மாணவனாக இருந்தபோது நிகழ்ந்த சம்பவம் ஒன்றை இக்கட்டுரை விபரிக்கின்றது. இது வீரகேசரியில் வெளிவந்தது.

சேர் கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரணத்துக்கு ஆற்றிய நற்பணிகளை நினைவுகூர வேண்டும் என்ற ஆர்வத்தால் உருப்பெற்றது 'சிவமணியின் திருப்பணி' என்பது சிவமணி அவர்களோடு கொண்டிருந்த தொடர்பு என்னையும் சமயப் பணிகளிலே ஈடுபட வைத்தது.

இலண்டன் பல்கலைக் கழகத்திலே தமிழ் விரிவுரையாளனாக இருந்தபோது நிகழ்ந்ததை வருணிக்கின்றது, 'வஞ்சிக்காண்டம் வேண்டுமா?' என்பது. பேராசிரியர் பேரன் மார் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் ஆராய்ச்சி மாணவனுக இருந்தபோது நிகழ்ந்த சம்பவம் இது. தமிழர்களின் மனப் பண்புக்கும் மேனுட்டார் மனப் போக்குக்குமுள்ள வேறு பாட்டைச் சித்தரிக்கின்றது இக் கட்டுரை.

பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்களின் பெரியபுராண விரிவுரைகளைக் கேட்டு மெய்மறந்து நின்ற நாட்கள் பல. பூசலார் வரலாற்றின் உட்கிடக்கையாக அமைந்துள்ள உயர்ந்த தத்துவத்தை அவர் எடுத்துச் சொல்லும் முறையே தனித்தன்மையானது. அதன் பிரதிபலிப்பே 'மனக்கோயில்'.

'மரணப் படுக்கையில்' என்ற கட்டுரை சிந்தாமணியில் வெளிவந்தது. இலங்கை வானெலியில் இடம் பெற்ற எனது பேச்சு 'சாப விமோசனம்' என்ற தலைப்பிலே புதிய வடிவம் பெற்றுள்ளது.

'செருப்புத் தேய்ந்துவிடுமே' என்பதும், 'கண்களே பேசும் வாய்திறந்தே' என்பதும் தகவல் திணைக்களத்தின் **புத்தொளி** என்ற திங்கள் இதழில் வெளிவந்தவை.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்', 'காணுர் எனச் செய்யார் மாணு வினை', உள்ளத்தனையது உயர்வு' என்ற மூன்று படைப்புகளும் பேராசிரியர் மு. வ. அவர்களிடம் பாடங்கேட்டபோது என் சிந்தனையிலே எழுந்தவை. இந்தப் பதினெரு கட்டுரைகளும் 'உள்ளத்தனையது உயர்வு' என்ற பெயரோடு வெளிவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகப் பணிப் பாளர் டாக்டர் தி. முருகரத்தினம் எனது அன்பு செழுமிய நண்பர். அன்னார் இந்நாலுக்கு அணிந் துரை தந்து சிறப்பித்துள்ளார். அவரின் அன்புக் கும் பண்புக்கும் தலை வணங்குகின்றேன்.

பல தொல்லைகளுக்கிடையே சிறந்த முறை யிலே இந்த நூலை அச்சேற்றி உதவிய எனது உறவினரும் தந்தை போன்றவருமான ஸ்ரீ காந்தா அச்சக உரிமையாளரான மறவன்புலம் சமாதான நீதவான் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எனது நெஞ்சு நிறைந்த நன்றி என்றும் உரியது.

'நடராலயம்'
4, 40 ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 6,
28 - 2 - 84

கலாநிதி ஆ. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழகத்துச் சென்னை மாநகரில் செம்மாந்து விளங்கும் பச்சையப்பன் கல்லூரி ஒரு நூற்றுண்டின் மேலாக இந்நாட்டிற்குக் கல்விக் கண் வளங்கிய பெருமை படைத்தது. 'உச்சிமேல் புலவர் கொள் பச்சையப்பன்' என மெச்சிப் போற்றும் பேச்சும் அக்கல்விக் கழகத்திற்கு உண்டு. அதற்குக் காரணம் பைந்தமிழ்க் குடும்பம் ஒன்று அங்கே உருவாகி வந்தது. தமிழ் முதுகலைக் கல்வி வழங்கிய கல்லூரிகளிலே அது முன்னோடி. இந்த நூற்றுண்டின் நாற்பதாம் ஆண்டுகளிலும் ஐம்பதாம் ஆண்டுகளிலும் அத் தமிழ்க் குடும்பம் செழித்து வளர்ந்தோங்கியது. பெரும் பேராசான் மு. வரதராசனார் தலைமையில் ஓர் ஆசிரியர் அணி இக் குடும்பத்தின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் பொறுப்பேற்றிருந்தது. கடல் கடந்த தமிழ் கூறு நல்லுலகம் எங்கணுமிருந்து மாணாக்கர் பச்சையப்பனை நோக்கித் திரண்டு மொய்த்தனர். இவ்வாறு பச்சையப்பனில் பசுந்தமிழ் பயின்ருேருள் ஈழத்துத் தோழர் இன்முகத்து நண்பர் கந்தையாவும் ஒருவர். இக்குடும்பத்துறவே அவர் பேச்சிலும் எழுத்திலும் நாம் காண முடிகிறது. அப்பேரறிஞரால் போற்றிப் பாராட்டப் பெற்றவர் டாக்டர் கந்தையா.

ஈழத்தில் தமிழ் வளர்க்கும் டாக்டர் கந்தையா **உள்ளத்தனையது உயர்வு** என்னும் கட்டுரைத் தொகுப்பு ஒன்றினை இப்போது நூலாக வெளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வருகின்றார். இதில் பதினொரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் ஓரொரு கருத்தினை வலியுறுத்துகின்றது. அவர் பிறந்த சமயத்தில் சிறந்த ஈடுபாடு, கற்ற இலக்கியங்களிலே பெற்ற புலமை, ஆண்ற பேராசிரியரிடம் சான்ற பற்று, பெருமக்கள்பால் கொண்ட பெருமதிப்பு ஆகியவை இவர் கட்டுரையில் புலப்படுகின்றன.

அவர் வெள்ளை உள்ளம் போன்ற தெள்ளிய மொழி; அவர் புலமையைப் புலப்படுத்தும் இலக்கிய நடை; எதுகையும் மோனையும் ஆங்காங்கே இன்சுவை ஊட்டும் பாங்கு — இவை அவர் உரைகளின் சிறப்பியல்புகள். கற்றோரும் மற்றோரும் ஒருங்கே படித்துச் சுவைக்கத்தக்க விருந்து இது எனலாம்.

காலத்தாலும் இடத்தாலும் விலகி நின்றாலும் பச்சையப்பன் குடும்ப உணர்ச்சியே எங்களிடை நட்பாங்கிழமை தந்தது. நட்புக்கும் நன்றிக்கும் உரிய கந்தையாவின் செந்தமிழ் பணியினை வாழ்த்தி வரவேற்கிறேன்.

**டாக்டர் தி. முருகரத்தினம்**
*விரிதமிழ் இயக்குநர்,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்.*

*தஞ்சாவூர்*
*15 - 7 - 83*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எளிமையான உரை நடையில் முற்கால இலக்கிய இனிமைகளை இன்றைய தலைமுறைக்கு எடுத்துக் கூறும் பணியில் கலாநிதி ஆ. கந்தையா ஈடுபட்டுள்ளார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று தன் தமிழ் அறிவை மேலும் வளர்த்த காலந் தொட்டு இம் முயற்சிகளில் அவர் ஈடுபட்டு வருகிறார். மலரும் மணமும், இலக்கிய வளம் ஆகிய இரு நூல்களையும் நாம் முன்பு வெளியிட்டு அவரின் இலக்கிய முயற்சிகட்கு ஊக்கம் கொடுத்தோம்.

இந்த நாட்டு எழுத்தாளர்கள், இந்த நாட்டிலேயே தமது படைப்புகளை வெளியிட வேண்டும். தமிழர் வாழும் ஏனைய நாடுகட்கு அவை ஏற்றுமதியாக வேண்டும் என்பதில் ஆர்வமுடையோம். கடந்த சில ஆண்டுகளாக இந்நாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளைத் தமிழகத்துக்கு ஏற்றுமதி செய்து விற்பனையாக்கி வருகிறோம். எமது இந்த முயற்சிகட்கு, இந்த நாட்டிலும், தமிழகத்திலும் உள்ள வாசகர்களின் ஆதரவு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

எனது ஊரவரும் இளவலுமான கலாநிதி ஆ. கந்தையா அவர்களின் இந்நூலைப் பதிப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். தமிழ் கூறும் நல்லுலகம், எமது முந்தைய பதிப்புகட்கு அளித்த ஆதரவை இந்நூலுக்கும் அளிக்குமாறு வேண்டுகிறோம்.

மறவன்புலவு,
சாவகச்சேரி.
மாசி 1984

**மு. கணபதிப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ......


| | | |
|---|---|---|
| 1. | மனக்கோயில் | 1 |
| 2. | மரணப் படுக்கையில் | 10 |
| 3. | கறிசாப்பிடுவாயா? | 19 |
| 4. | சாப விமோசனம் | 31 |
| 5. | செருப்புத் தேய்ந்துவிடுமே! | 41 |
| 6. | உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் | 51 |
| 7. | வஞ்சிக் காண்டம் வேண்டுமா? | 64 |
| 8. | காணுர் எனச் செய்யார் மாணுவினை | 79 |
| 9. | சிவமணியின் திருப்பணி | 91 |
| 10. | கண்களே பேசும் வாய்திறந்தே | 98 |
| 11. | உள்ளத்தனையது உயர்வு | 105 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. மனக்கோயில்

பல்லவர் காலத்திலே தமிழகத்தில் அற்புத நிகழ்ச்சி ஒன்று நடந்ததாகச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் எடுத்துக் கூறுகின்ருர். இறைவனின் திவ்விய இயல்பையும் அடியார்களின் அன்பின் திறனையும் அந்த நிகழ்ச்சி இனிதுதெளிவு படுத்துகின்றது. சிறிய கதை; ஆனல், பெரிய தத்துவக் கருத்தைப் புலப்படுத்துகின்றது.

தமிழகத்தில் ஒரே காலத்தில் இரண்டு சிவாலயங்கள் கட்டப்பட்டன. ஒன்று காஞ்சிபுரத்திற் கட்டப்பட்டது; மற்றையது திருநின்றவூரில் எழுந்தது.

காஞ்சிபுரத்திலே காடவர்கோன் என்ற மன்னன் கோயிலைக் கட்டுவித்தான்; திருநின்றவூரிலே பூசலார் என்ற அடியார் கட்டுவித்தார். ஒன்று மன்னவனின் கோயில்; மற்றையது மறையவனின் கோயில். முன்னையது கற்கோயில்; பின்னையது மனக்கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநின்றவூர் தொண்டை மண்டலத்திலே யுள்ள ஒரு சிறிய கிராமம். அவ்வூர் இன்று தின்னனூர் என்று வழங்கப்படுகின்றது.

அங்கே பூசலார் என்ற அடியவர் ஒருவர் வாழ்ந்தார். அவர் மறையவர் குலத்திலே பிறந்தவர்; சிவபத்தியிற் சிறந்தவர்; சிவனடியாரை உள்ளன்போடு உபசரித்து இன்பம் காண்பவர்.

இறைவனுக்கு ஆலயம் ஒன்றை அமைக்க வேண்டுமெனப் பூசலாரின் உள்ளம் விழைந்தது. ஆனல், அவர் ஓர் ஏழை; அவர் கையிற் பணமே இல்லை. வெறுங்கை முழம் போடுமா? ஆகம முறைப்படி ஆலயத்தை அமைக்கப் பெருந் தொகைப் பணம் வேண்டுமே! பூசலாரின் உள் ளம் ஊசலாடியது. பொருள் தேடிப் புறப்பட் டார். ஊர்கள்தோறும் அலைந்து திரிந்தார். பூச லாரின் கோலத்தைக் கண்ட எவரும் அவருக்குப் பொருள் கொடுக்கத் தயங்கினர்.

நாயனர் உள்ளம் நலிந்தார்; உடல் மெலிந் தார். சிவபெருமான்மீது கொண்ட தளராத அன் பினலே, பூசலார் தாம் மேற்கொண்ட முயற்சி யைக் கைவிட்டாரல்லர். எவ்வாருயினும் சிவ பெருமானுக்கு ஆலயம் ஒன்றை அமைத்தே தீருவேன் என்று உறுதிகொண்டார்.

"ஆலயம் அமைப்பதற்குப் பொருள் அவசி யமா? பொருள் இல்லாமலே ஆலயம் ஒன்றை அமைக்க முடியாதா?" என்று பூசலார் சிந்திக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினார். அவர் உள்ளம் கற்பனை உலகிற்குச் சென்றது. கற்பனை உலகிலே 'மனக்கோயில்' ஒன்றினைக் கட்டியெழுப்பத் துணிந்தார். ஆலயம் அமைத்தற்கான நிதியத்தைச் சிறிது சிறிதாகத் தேடினார். சிந்தையிலே திரட்டிய நிதியம் திரண்டு பெருகியது.

"நினைப்பினால் எடுக்கநேர்ந்து நிகழ்வுறு நிதியமெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையாற் றிரட்டிக்
கொண்டார்"

இவ்வாறு, மனக்கோயிலைக் கட்டுவதற்குப் பூசலார் தமது சிந்தையாலே நிதியந் திரட்டிய திறனைச் சேக்கிழார் வருணித்துள்ளார்.

நிதியத்தைச் சிந்தையிலே திரட்டிக் கொண்ட பூசலார் திருநின்றவூரிலேயுள்ள ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டார். கோயிலைக் கட்டுவதற்கு வேண்டிய துணைக்கருவிகளைத் தேடினார். கருங்கற்கள் வந்து குவிந்தன. தமிழகத்திலே தலைசிறந்து விளங்கிய சிற்பிகள் பலர் வந்துசேர்ந்தனர்; ஆலயம் அமைப்பதற்கான ஆகம முறையை எடுத்துரைக்க அறிஞர்கள் திரண்டனர்.

ஆகம வல்லுநர் ஆலயப் படவரைவு ஒன்றை வரைந்தனர். சிற்பிகள் கற்களைப் பொழிந்து செப்பஞ் செய்தனர். மக்களும் திரண்டனர்; மறையோரும் வந்தனர்

கோயிலுக்கான கால்கோள் விழா, ஆகம முறைப்படி சுபதினத்திலே கோலாகலமாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கற் கோயில் மனக்கோயிலாய் மாறியது. அடிமுதல் முடிவரை சிற்ப வேலைப்பாடுகளோடு அமைந்த ஆலயம் ஒன்று பூசலார் மனத்திலே உருப்பெறத் தொடங்கியது.

பூசலாரின் மனக்கோயில் திருநின்றவூரிற் கட்டியெழுப்பப்பட்ட அதே காலத்தில், காடவமன்னன் காஞ்சிபுரத்திலே கற்கோயில் ஒன்றைக் கட்டத் தொடங்கினன்.

காடவர்கோன் நாட்டை ஆளும் மன்னன்; பூசலார் இறையன்பு பூண்ட ஏழை.

மன்னனின் கற்கோயிலுக்கும் ஏழையின் மனக் கோயிலுக்கும் உள்ள உறவை உரைப்பது எங்ஙனம்?

ஒன்று தூலமானது; மற்றது சூக்குமமானது. முன்னையது அரசன் அமைக்கும் ஆலயம் என்ற ஆணவத்தோடு சேர்ந்தது. பின்னையது அன்பினுல் அமைந்தது.

காஞ்சிபுரத்தில் வண்டி வண்டியாகக் கருங் கற்கள் வந்து குவிந்தன. தமிழகத்திலே தலைசிறந்து விளங்கிய சிற்பிகள் நூற்றுக் கணக்கானோர் அங்கு வந்து சேர்ந்தனர். ஆகம முறையினை வகுத்துரைக்க வல்லுநர் பலர் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு ஒப்பற்ற ஆலயம் ஒன்றை உருவாக்க அரசமட்டத்திலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. கட்டட வேலைகள் இரவு பகலாக நடை பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பிகள் கைவண்ணம் ஒருபுறம்; ஆகம வல்லுநர் ஆய்வுகள் மறுபுறம்; கைவல் தச்சர் கற்பனைத் திறன் மிளிர்ந்தது; ஓவியர் கைத்திறன திகழ்ந்தது. இவ்வாறு அழகான ஆலயம் ஒன்று உருப்பெற்றது. தமிழகத்திலேயே ஒப்பிட்டுரைக்க முடியாத சிவாலயமாக, காடவர்கோன் கட்டிய ஆலயம் தலைநிமிர்ந்து வானளாவி நின்றது.

காடவர்கோன் தன் பரிவாரங்களோடு, ஆலயம் அமைக்கப்பட்ட இடத்துக்கு அடிக்கடி வந்து சென்ருன், ஆலயம் கட்டியெழுப்பப்பட்ட ஒவ்வொரு கட்டத்திலும் மன்னவன் மனத்திலே ஆணவச் செருக்குச் சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது.

ஆனல், பூசலார் கட்டிய மனக்கோயில் வளர்ச்சிக் கட்டம் ஒவ்வொன்றிலும் அவரின் அன்புப் பெருக்கு அதிகரித்து வந்தது. இன்னெரு வகையாகக் கூறின், காடவர்கோனின் கற்கோயில், செல்வப்பெருக்கைப் புலப்படுத்தி நிற்க, பூசலாரின் புதுமைக் கோயில், பத்திப் பெருக்கைப் பறைசாற்றி நின்றது!

காடவர்கோன் கட்டியெழுப்பிய கோயிலைக் காண்பதற்கு ஆயிரக் கணக்கானேர் காஞ்சி மாநகருக்கு வந்தனர். பூசலாரின் மனக்கோயிலைப் பார்ப்பதற்குத் திருநின்றவூரை நோக்கி எவரும் வந்திலர்; கோயில் கட்டப்பட்டிருந்த புனித இடத்தையும் எவரும் கண்டிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடவர்கோன் தான் கட்டிமுடித்த கற்கோயிலுக்குக் குடமுழுக்கு நாள் குறித்தது போலவே, பூசலாரும் தாம் கட்டி முடித்த மனக்கோயிலின் பிரதிட்டைக்குச் சுபதினத்தை நிருணயித்தார். இருவரும் தெரிந்தெடுத்த சுபதினமும் ஒரே நாளாக அமைந்தமை விந்தைக்குரியதே!

தமிழகத்திலே பூசலார் என்ருெருவர் வாழ்கின்ருர் என்பதைக் காடவர்கோன் அறிந்தானுமல்லன்; அன்றியும், அவர் கட்டிய மனக்கோயிலைப்பற்றிக் காடவர்கோன் கேள்விப்பட்டானுமல்லன். அந்தக் கோயிலுக்குக் குடமுழுக்கு நாளைப் பூசலார் குறிப்பிட்டதையும் காடவர்கோன் அறியான்.

இரண்டு கோயில்களுக்கும் குடமுழுக்குச் செய்தற்காய அந்தச் சுபதினமும் நெருங்கியது. காஞ்சிபுரம் விழாக்கோலம் பூண்டது. குடமுழுக்கைக் காணக் காஞ்சிபுரத்தில் அடியார்கள் ஆயிரக்கணக்கிற் கூடினர்.

ஆனல், திருநின்றவூரில் அமைதியே நிலவியது. விழாக்கோலமும் இல்லை; விழாக்காண வந்தாருமில்லை.

காடவர்கோன் குடமுழுக்குக்காய ஒழுங்குகளை மேற்பார்வை செய்த பின்னர், படுக்கைகுச் சென்ருன். படுத்ததுமே கண்ணயர்ந்து விட்டான்

ஆழ்ந்த உறக்கத்தில் அயர்ந்திருந்தபோது, மன்னவனின் கனவிலே இறைவன் தோன்றினன். தோன்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருநின்றவூரிலே பூசலார் என்ற பெயருள்ள அன்பன் ஒருவன் இருக்கிறான். அவன் நீண்ட நாள்களாக நினைந்து நினைந்து ஆலயம் ஒன்றைக் கட்டி முடித்துள்ளான். அவ்வாலயத்துக்கு நாளை குடமுழுக்கு நடைபெறவுள்ளது. அன்று நாம் அவ்வாலயத்தில் எழுந்தருள்வோம். ஆதலால், உனது கோயிற் குடமுழுக்கை இன்னொரு நாளைக்கு வைத்துக்கொள்"

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

"நின்றவூர்ப் பூசலன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டாலயத்து நாளைநாம் புகுவோம் நீயிங்
கொன்றிய செயலைநாளை ஒழிந்துபின் கொள்வா யென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்
கொண்டருளப் போந்தார்"

என்று இந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

காடவர்கோன் உறக்கத்தினின்று விழித்தெழுந்தான். "எனது கோயிலினும் சிறந்த கோயிலாக அமைந்ததனாலேயே இறைவன் பூசலாரின் கோயிற் குடமுழுக்குக்குச் செல்லத் திருவுளங் கொண்டார். யான் அமைதத ஆலயமே தமிழகத்திலே தலைசிறந்தது என்று இதுவரை எண்ணி இறுமாந்தேன். ஆனால், பூசலாரின ஆலயத்தையே இறைவன் விரும்பினான். பூசலாரின் ஆலயம் இறைவனின் திருவுள்ளத்தைக் கவர்ந்ததற்கான காரணங்கள் யாவை?" என்று வினவெழுப்பி வியந்து நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உள்ளம் பூசலாரையும் அவர் அமைத்த கோயிலையும் காண்பதற்கு விழைந்தது; காஞ்சியை விட்டுப் புறப்பட்டான்; திருநின்றவூரைச் சென்று சேர்ந்தான்.

''பூசலார் எங்கே இருக்கின்றார்? அவர் கட்டிய கோயில் எங்கே அமைந்துள்ளது?'' என்று அங்கு நின்றோரை வினவினன்.

''பூசலார் என்று ஒருவர் இங்கே இல்லை; அவர் ஓர் ஆலயத்தை அமைத்ததுவும் நமக்குத் தெரியாது'' என்ற பதில்களே கிடைத்தன.

காடவர்கோன் அவ்வூர் அந்தணர்களை அழைப்பித்தான் ''மறையவர்களே! பூசலார் என்பவர் யார்? அவர் எங்கே வாழ்கின்றார்; அவரைப் பார்க்க வேண்டும்'' என்றான்.

''பூசலார் ஒரு சிவபத்தர்; அவர் இவ்வூரிலேயே வாழ்கின்றார்; அவரை உடனே அழைத்து வருவோம்'' என்று விடைகூறி, அவரை அழைத்துவர அந்தணர்கள் புறப்பட்டனர்,

மன்னவன் அவர்களைத் தடுத்து நிறுத்தினன்; தானே பூசலாரை நேரிற் பார்க்கவேண்டும் என்று கூறினன். அந்த அந்தணர்களின் துணைகொண்டு பூசலாரைக் காண்பதற்குப் புறப்பட்டான்.

பூசலார் இருந்த இடத்தைக் காடவர்கோன் சென்று சேர்ந்தான். பூசலாரைக் கண்டதும் அவர் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினன். வணங்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமீ! நீர் ஆலயம் அமைத்திருக்கின்றீர் என்றும், அவ்வாலயத்துக்குப் பிரதிட்டை நிகழும் நாள் இன்றேயாகும் என்றும் சிவபெருமான் என் கனவிலே தோன்றிக் கூறியருளினர். அடியேன் விழித்தெழுந்த உடனேயே அவ்வாலயத்தைத் தரிசித்து வணங்கி அருள்பெற்றேக இங்கு வந்துள்ளேன்" என்ருன்.

மன்னவன் கூறியவை பூசலாரை வியப்பில் ஆழ்த்தின.

"நான் கட்டிய கோயில் 'மனக்கோயில்'. அக்கோயில், கட்டப்பட்டதை எவருமே அறியார். அக்கோயிலைக் கண்களாற் காணவும் முடியாது. ஆனுல், காடவர்கோன் கனவிலே கண்டு சிறியேனைத் தேடி இங்கு வந்துள்ளமை இறைவனின் திருவருளே" என்று நினைந்து நினைந்து உள்ளம் உருகினுர். பின்னர் மன்னவனைப் பார்த்து,

"என்னையோர் பொருளாய்க் கொண்டே
எம்பிரான் அருள் செய்தாரேல்
முன்வரு நிதியிலாமை மனத்தினுல்
முயன்ற கோயில் இன்னதாம்."

என்று சிந்தையிற் கட்டிய கோயிலின் வரலாற்றைப் பூசலார் எடுத்துக் கூறினுர்.

பூசலார் கூறியவை கேட்டு அரசன் வியந்து நின்ருன். "மனத்துக்கண் மாசிலா இவ்வன்பரின் பத்தித் திறந்தான் என்னே! தூய்மையான உள்ளத்திலே அமைத்த கோயிலின் புனிதத்தையும் புதுமையையும் என்னென்று எடுத்துரைப்பேன்" என்று வியந்து நின்ருன் காடவர்கோன்.

—□—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மரணப் படுக்கையில்

''அறம் சிறப்பையும் கொடுக்கும்; செல்வத்தையும் தரும்'' என்று கூறிய வள்ளுவர், ''அன்றறிவாம் என்னுது அறஞ்செய்க'' என்று வலியுறுத்துகின்ருர்.

அறஞ் செய்யாமற் பொருளைத் தேடி வைத்தவர்கள், இறுதியில் ஏமாந்து துன்பமுற்றதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுற வருணிக்கின்றன.

''அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.''

எனத் திருவள்ளுவர் அறத்தான் வரும் இன்பத்தைப் புகழ்ந்து பேசுகிருர்.

அறஞ் செய்து அதனுல் வரும் இன்பத்தை அனுபவியாத இல்லறத்தான் ஒருவனின் புல்லறிவாண்மையை நாலடியார் நயம்பட நவில்கின்றது; சீவகசிந்தாமணி கவின்பெறச் சித்திரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலுள்ள சிற்றூர் ஒன்றிலே, அறத்தின் பெருமையை அறியாத ஒருவன் வாழ்ந்தான். அவன் மனைவியும் அவனைப் போலவே அறத்தின் சிறப்பை அறியாதவள். அவர்களுக்குப் பல ஆண்டுகளாகப் பிள்ளைகள் பிறக்கவில்லை. மலடராகவே வாழ்ந்து இல்லறத்தை நடாத்தி வந்தனர். மலடராக இருந்த போதிலும் பணத்தின்மேல் அவர்களுக்கு இருந்த ஆசைக்கு அளவேயில்லை.

பிள்ளைப் பேற்றைப் பெற்றவன், எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. வயது முதிர்ந்து கிழவனாகின்றபோது, தன்னைத் தன் பிள்ளைகளே பேணிக் காப்பர் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. எனவே, பொருளை அவன் பெரிதாக மதிப்பதில்லை. தன் குழந்தைகளை நன்கு வளர்த்து, கல்வி புகட்டி அவர்களைச் சான்றோர்களாக்கவே அவன் விழைகின்றான். தனது வருவாயைக்கொண்டு இல்லறத்தை இனிது நடத்துகின்றான். இரந்து வந்தோருக்கு இல்லை என்னாது அறஞ் செய்கின்றான். அறத்தான் வருகின்ற இன்பத்தைப் பெற்று மகிழ்கின்றான்.

ஆனால், மலடனாக வாழ்கின்றவனின் வாழ்க்கை அப்படியானதன்று. எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமே அவனுக்கு அதிகம். வயது முதிர்ந்து கிழவனாகின்றபோது தன்னைப் பேணிக் காப்பதற்கு எவரும் இல்லையே என்ற ஏக்கம் அவனை வாட்டுகின்றது. எனவே, பணம் தன்னைப் பேணுமென்று நம்புகிறான்; பணத்துக்கே அடிமையாகின்றான். பணத்தைத் தேடுகின்றான்; உண்ணாமலும் உடுக்காமலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளுக்குக் கொடுக்காமலும் மிச்சம் பிடிக்கின்றான். அவ்வாறு தேடிய பணத்தைக் கொண்டு எவரையாவது பயன்படுத்தித் தன்னைப் பேணிக் காக்க முடியும் என்று நம்புகிறான்.

எனவே, முன்னையவன் பணத்தைப் பற்றிக் கவலையற்றவனாக வாழ; பின்னையவன் பணத்தைப் பற்றிய கவலையோடு வாழ்கின்றான். இதுவே இருவருக்குமுள்ள வேறுபாடு!

அறஞ் செய்யாது சிற்றூரில் வாழ்ந்தவன் பணத்தைத் தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். அவன் மனைவியும் 'சாடிக்கேற்ற மூடியாக அமைந்தாள். ஏழைகளுக்குக் கொடுக்காமலும், உண்டு உடுத்து மகிழாமலும் கணவனும் மனைவியும் பணத்தை மிச்சம் பிடித்தனர். சிறு துளி பெரு வெள்ளம் அல்லவா? சிறிது சிறிதாக மிச்சம் பிடித்த பணம் பல்கிப் பெருகியது. பணமாக வைத்திருப்பதிலும் பொன்னாக வைத்திருப்பது பெறுமதியாகும் என்று கருதினர்

பணத்தைப் பொன்னாக மாற்றிப் பொதியாகக் கட்டிப் பானையுள் மறைத்துப் பழைய சாமான்கள் போட்டுக் குவித்த பரணின்மேலே பதுக்கி வைத்தனர்.

அறஞ் செய்யாது பொன்னைத் தேடிப் பதுக்கி வைத்த அந்த மனிதன் ஒருநாள் திடீரென நோய் வாய்ப்பட்டான். படுத்திருந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முடியாது அல்லலுற்றான். கால்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டபடியே கிடந்தன; கைகள் சோர்ந்து வீழ்ந்தன; விழிகள் செருகிக் கொள்ளத் தொடங்கின. வாயிலிருந்து சொற்கள் வெளிவர மறுத்தன. உடல் முழுவதும் குளிர்ந்து காணப்பட்டது. மனைவி அவன் பக்கலில் அமர்ந்திருந்தாள். அவள் கண்களிருந்து கண்ணீர்த் துளிகள் விழுந்து கொண்டிருந்தன.

உற்றார் உறவினர் யாவரும் அங்கே வந்து சேர்ந்தனர்; படுக்கையிற் கிடந்தவனைப் பார்த்துப் பரிதாபப்பட்டனர். "நேற்று நலமுடன் இருந்தவன்; இன்று படுத்த படுக்கையாகக் கிடக்கிறானே" என்று கவலை கொண்டனர்.

இந்தத் துன்பமான சூழ்நிலையில்,

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்."

என்ற வள்ளுவர் குறள் அவன் நினைவுக்கு வந்தது. படுக்கையிற் கிடந்தவன் உற்றார் உறவினரைப் பார்த்துக் கண் கலங்கினான் அப்போது அவனுக்கு என்றுமில்லாத ஓர் ஆசை ஏற்பட்டது.

அன்பான தன் மனைவியை ஆசையோடு பார்த்தான்; தன் உள்ளக்கருத்தை வெளியிட முனைந்தான் ஆனால், உள்ளத்தில் எழுந்த எண்ணத்தை எடுத்துச்சொல்ல உதடுகள் மறுத்தன. ஒரு முறையா? இல்லை. பலமுறை முயன்றான். முடியவே இல்லை. இறுதியிலே தன் உள்ளக் கருத்தைச் சைகையாற் காட்ட எண்ணினான். சோர்ந்து விழுந்து கிடந்த கையைப் பலமுறை மேலே தூக்கித் தூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிப் பார்த்தான். முடியவில்லை. இறுதியில் ஒரு வாறு கையை மேலே தூக்கித் தன் உள்ளக் கருத்தை மனைவிக்குப் புலப்படுத்தி விட்டான்.

கணவன் தன் கையினுலே காட்டிய குறிப்பை மனைவி புரிந்து கொண்டாள். ஆனால், அங்கே நின்ற ஏனையோர் அவன் குறிப்பிட்டதைப் புரிந்துகொள்ள முடியாது விழித்தனர் கணவன் கையாற் காட்டி யதைப் புரிந்துகொண்ட மனைவியின் முகத்தில் ஏற் பட்ட மாற்றத்தை எவ்வாறு வருணிப்பது? அவ ளுக்குத் தேள் கொட்டியது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. செய்வது அறியாது திகைத்தாள். உண்மை தெரிந்துவிடப் போகின்றதே என்று பயந் தாள். ''வாழுள் முழுவதும் துன்பப்பட்டுத தேடிய பொனனை ஒரு நாளிலே தொலைத்துவிட எண் ணுகிறுனே! படு பாவி'' என்று தனக்குள்ளேயே கூறி உள்ளங் குமுறினுள். ஆனால், தன் உள்ளக் குமுறலை அடக்கி, முன்தானைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். பின்னர், இக்கட்டான இந்த நிலையைச் சமாளித்து விடத் துணிந்தாள்; அவள் சிந்தனை சிறகடித்துப் பறந்தது!

கண்களிற் கண்ணீர் பெருகியோட அங்கே இருந்தவர்களைப் பார்த்து, ''நான் கொடிய பாவி யாகிவிட்டேன்'' என்று வாய்விட்டுக் கதறினுள். ''என் கணவனுக்கு விளாம்பழம் சாப்பிடுவதற்கு அலாதியான பிரியம். அதுவும் வீட்டின் பின்புறத் திலே நிற்கும் விளாமரத்தின் பழத்தையே அடிக் கடி விரும்பி உண்பார். உயிர் நீங்கப்போகும் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் அந்தப் பழத்தை உண்டு சுவைப்பதற்கு அவர் உள்ளம் விழைகின்றது! ஆனால் வீட்டின் பின்புறத்தே நிற்கின்ற விளாமரத்திலே பழங்கள் இல்லையே! மரத்தில் உள்ளவை யாவும் காய்களாகவே இருக்கின்றன. பருவம் அற்றவை; உண்டால் விக்குள் வந்து விடும்! உயிர் போகப் போகும் நேரத்தில் அவர் விரும்பிக் கேட்பதைக் கொடுக்க முடியாத பாவியாகிவிட்டேன்'' என்று கூறிச் சிறந்தவளைப் போன்று நடித்துச் சிறவாத கட்டுரையால் அங்கிருந்தோர் எல்லோரையுமே ஏமாற்றி விட்டாள். அங்கே இருந்தோர், ''பாவம்! கணவன் மேல் எவ்வளவு பிரியமாக இருக்கிறாள்'' என்று கூறி அவளுக்காக இரக்கப்பட்டனர்.

கணவன் கையாற் காட்டி, மனைவியிடம் எதனைக் கேட்டான்? அவன் கேட்டதை மனைவியே அறிவாள்; மற்றையோர் அறியார். வாழ்நாள் முழுவதிலும் ஏற்படாத ஆசை அவனுக்கு உயிர் போகும் நேரத்தில் ஏற்பட்டதில் வியப்பே இல்லை! ''நாச் செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்'' என்ற வள்ளுவரின் குறள் அவன் மன மாற்றத்திற்குக் காரணம் போலும்! ''அறஞ் செய்யாது வாழ்ந்து விட்டேன்! உயிர் நீங்கப் போகும் நேரத்திலாவது, தேடிவைத்த பொன்னைப் பகிர்ந்து அளித்து அறஞ்செய்யக் கூடாதா?'' என்று அவன் தன்னையே கேட்டுக் கொண்டான். எனவே, பொதியாகக் கட்டிப் பரணிலே மறைத்து வைத்த பொன் பொதியைத் தன் கையினாலே காட்டினான். அதனைத் கொண்டு வந்து தன்னிடம் கொடுக்குமாறு மனைவியிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையோடு சைகை செய்தான். ''மனைவி பொதியைக் கொண்டு வருவாள்; அதிலுள்ள உள்ள பொன்னைப் பகிர்ந்து அளித்து அறஞ் செய்து மகிழ்ந்து உயிர் விடலாம்'' என்று எண்ணினான்.

பாவம், அவன் மனைவியே அவனை ஏமாற்றி விட்டாள். ''பொன் பொதியைக் கொண்டுவா'' என்று கேட்ட கணவனுக்கு, அவன் பொன் பொதியையே கேட்கிறான் என்பதை நன்கு புரிந்து கொண்ட பின்பும், அதனை மறைத்து, ''உண்பதற்கு விளாம்பழம் கேட்கின்றீர்களே'' என்று சாதுரியமாகக் கதையை மாற்றி விடுகின்ற அவளின் திறமையைப் பாராட்டத்தான் வேண்டும். அதே நேரத்தில், படுக்கையிற் கிடந்த கணவனுடைய முகத்தில் உண்டான ஏமாற்றத்தைக் கண்டு பரிதாபப்படாமலும் இருக்க முடியாது.

உள்ளத்தில் உள்ளதை எடுத்துச் சொல்ல முடியாத நிலைமையாற் சைகை செய்து கருத்தைப் புலப்படுத்தியபோது, அதனைப் புரிந்துகொண்ட மனைவியே புரியாதவள்போல நடித்துக் கதையை மாற்றிவிடுகிறாள். அப்போது அவன், ''காலத்தை வீணாக்கிப் பயனற்ற வாழ்வை நடாத்தி அறஞ் செய்யாது மறஞ் செய்து விட்டேனே'' என்று ஏங்கினான். அந்த ஏக்கத்தோடும், ஏமாற்றத்தோடும் அவனின் உடலை விட்டு உயிர் நீங்கியது; கண்கள் விழித்தபடியே கிடந்தன.

இக் கதையினை நாலடியார் நயம்பட ஒரு வெண்பாவில் எடுத்துரைக்கின்றது. ''இளமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்திலேயே தமது செல்லுமிடமாகிய மறுமைக்கு, அறமாகிய உணவு அழுந்த அழுந்தக் கட்டுணவுதேடிக்கொள்ளாதவராய், பொருளில் இறுக்கம் மிகக்கொண்டு அறவினையைப் பிற்காலத்திற் காண்போம்என்று செம்மாந்திருக்கும் புல்லறிவினர், இறுதிக் காலத்திற் சாக்காட்டுத் துன்பத்தினால் அறநினைவு வந்து அந்நிலையிற் பேச நாவெழாமையால் அயலிலுள்ளார்க்கு அறஞ் செய்மினெனக் கைக்குறியாகக்காட்டும் பொன்னும் அவராற் புளிச் சுவையுள்ளவிளங்காய் கேட்டலாகக் கருதி மறுக்கப்படும்'' என்ற பொருளினை அவ்வெண்பா எடுத்துக் கூறுகின்றது:

> சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
> இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்—இறுகிறுகிப்
> பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
> பொன்னும் புளிவிளங்கா யாம்.

என்ற நாலடியாரில் வரும் பாடல் ''புல்லறிவு எதனையுங் காலத்திற் செய்து கொள்ளாது ஏமாந்து பின் கவலும்'' என்ற உண்மையினை இனிது புலப்படுத்துகின்றது.

நாலடியாரில் இடம்பெறும் இக் கருத்தினைத் திருத்தக்கதேவர் தாம் செய்த சீவகசிந்தாமணியிற் பொருத்தமான இடத்திலே எடுத்தாண்டு காப்பியத்தை அழகு செய்துள்ளார்.

சீவகன் ஊழ்வலியாற் சுபத்திரனின் கடைக்குச் சென்றனன். அங்கே வந்த சீவகனின் எழிலையும் இளமையையுங் கண்டு சுபத்திரன் வியப்புற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருன். அவனை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குச் சென்ருன். அவனுக்கு விருந்தளித்து மகிழ்வித்தான். சுபத்திரனின் மகள் கேமசரி, சீவகனைக் கண்டு,காதல் கொண்டாள்; அவனை மறக்கவியலாது வருந்தினுள். சீவகனைத் தன் மகள் கேமசரிக்குத் திருமணம் செய்துவைத்தான் சுபத்திரன். அவளுடன் சீவகன் இரண்டு திங்கள் இன்புற்று வாழ்ந்தான். பின்னர் அவள் அறியாதபடி, அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சென்ருன். வழியில் ஒருவனைக் கண்டு அறிவுரை வழங்கினுன். நாலடியாரில் வரும் கருத்தை அறிவுரையாக வழங்கி அறஞ் செய்தலின் அவசியத்தை வலியுறுத்தினுன்:

கையாற் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணு ளதனைக் காட்டா
ளையா விளாம்பழமே யென்கின்றீ
ராங்கதற்குப் பருவ மன்றென்
செய்கோ வெனச்சிறந்தாள் போற்சிறவாக்
கட்டுரையாற் குறித்தவெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. கறி சாப்பிடுவாயா ?

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலே சிறப்புத் தமிழ் வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த காலம். அப்போது, பேராசிரியர் மு. வரதராசனுர் தமிழ்த் துறைத் தலைவ்ராக இருந்தார். பேராசிரியர்கள் அ. ச. ஞானசம்பந்தன், அன்பழகன், அ. மு. பரமசிவானந்தம், அன்பு கணபதி ஆகியவர்களும் தமிழ்த் துறையிற் பணியாற்றினர். 'பச்சையப்பன் கல்லூரிப் படிக்கட்டும் பைந்தமிழ் பேசும்' என்று பலராலும் பாராட்டப்படும் நிலையிற் பச்சையப்பன் கல்லூரியிலே தமிழ்த்துறை விளங்கியது.

''வரதராசனுர் தமிழ்ப் பேராசிரியராக இருக்கின்ருர்; அவரிடம் தமிழ் கற்கவேண்டும்'' என்ற ஆர்வத்தாலே தூண்டப்பட்டுப் பச்சையப்பன் கல்லூரியிலே படிப்பதற்கு வந்துசேர்ந்த மாணவர் பலர். அவ்வாறு சேர்ந்து கொண்டவர்களில் யானும் ஒருவன் பேராசிரியர் வரதராசனுரிடம் ஐந்து ஆண்டுகள் தமிழ் கற்கின்ற நல்வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கிடைத்தது. தமிழை மட்டுமன்று: அவரிடம் பல நற்பண்புகளையுங் கற்றுக் கொண்டேன்.

இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே தமக்கெனத் தனியான ஓர் இடத்தைப் பெற்றுக் கொண்டவர் மு. வ அவர்கள். எழுபதுக்கும் அதிகமான நூல்களை அவர் எழுதியுள்ளார். நாவல், சிறுகதை, இலக்கியம், மொழியியல், நாடகம், வரலாறு என்னும் பல துறைகளிலும் நூல்களை எழுதினுர். எளிய தமிழில், அரிய கருத்துகளை எழுதும் ஆற்றல் அவருக்கு இருந்தது. கதை. கட்டுரை, கடிதம், நாவல் முதலியவற்றின் வாயிலாக அரியவற்றையெல்லாம் எளிதாக விளக்கித் தமிழ்ச் சமுதாயம் சிந்தித்துத் தெளிவு பெற்றுச் செயலாற்றத் தக்கவகையிலே அவர் பணியாற்றினுர், அன்னுரின் படைப்புகள் பண்பும் பயனுமுள்ளனவாக அமைந்து விளங்கின; தமிழர்களின் உள்ளங்களை நல்வழிப் படுத்தின.

பேராசிரியர் வரதராசனுர் நல்லாசிரியனுக்குரிய நற்பண்புகளைக் கொண்டவர் எடுத்துக் கொண்ட விடயத்தை மாணவர்களின் மனங் கொளக் கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர். கற்பித்தல் முறையிலே தமக்கென ஒரு பாணியையே மேற்கொண்டார் என்று கூறின், அது மிகையாகாது. கற்பிக்கும் விடயத்தைத் தெளிவாகத் தாம் தெரிந்து கொண்ட பின்னரே கற்பிப்பார் விரிவுரைக்கு வருமுன்னரே வீட்டிலே அதனை நன்கு ஆயத்தஞ் செய்வார். 'எதனைக் கற்பித்தல் வேண்டும்; அதனை எவ்வாறு கற்பித்தல் வேண்டும்' என்பதனை நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொண்ட பின்பே வகுப்பறைக்கு வரு வார்; ஆகவே, பாடத்தை எளிமையாக எடுத்துச் சொல்லுவார்; எடுத்துக்காட்டுகளைக் கொண்டு தெளிவுபடுத்துவார். எவரும் புரிந்து கொள்ளத் தக்கனவாக அவரின் விரிவுரைகள் இனிய எளிய தமிழில் அமையும். அதனுல், விரிவுரை முடிந்து மாணவர் வகுப்பறையை விட்டு வெளியே செல் லும்போது, மன நிறைவோடு செல்வர். அப்போது, பாடத்தைப் புரிந்து கொண்டோம் என்ற பூரிப்பு அவர்கள் முகத்திலே தோன்றக் காணலாம்.

'வாழ்க்கையில் உணர்ச்சிக்கு அதிகம் இடங் கொடுக்காமல், அறிவுக்கு இடமளித்து வாழ வேண் டும்' என்று அவர் பல்காலும் எடுத்துரைப்பார். சிலர் அறிவுரை வழங்குவர்; ஆனுல் அதன்படி வாழ்ந்து காட்டுவதில்லை. ஆயின், மு. வ அப்படி யானவர் அல்லர். சொல்லியதைச் செயலிலே காட் டினுர்; எழுதியவைகளை வாழ்ந்து காட்டினுர்; மேடைகளில் எடுத்துரைத்தவைகளை வாழ்க்கையிற் கடைப்பிடித்துக் காட்டினுர். இதனுற் போலும்,

"சொல்லுதல் யார்க்கும் எளிதாம் அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற திருக்குறளை அவர் மாணவர்களுக்கு அடிக் கடி நினைவுறுத்தினுர்.

மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாய் மு வ. வாழ்ந்து காட்டினுர். மாணவர்களுக்கு, உடல் நல மருத்துவராகவும் உளநல வித்தகராகவும் விளங் கினுர். இலக்கிய பாடத்தைச் சொல்லிக் கொடுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் போதும், இலக்கண பாடத்தைக் கற்பிக்கும் போதும் ஏற்ற இடங்களில் அறிவுரைகளை எடுத்து ரைப்பதற்கு அவர் பின்னிற்பதில்லை.

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் பாடிய, "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்" என்ற புறநானூற்றுப் பாடலை மு. வ. மாணவர்களுக்கு ஒருநாள் விளக்கிக் கொண் டிருந்தார். அப்போது, கல்வியின் இன்றியமையா மையை வலியுறுத்த வேண்டுமென அவர் உள்ளம் விழைந்தது போலும்—அவர் உள்ளத்திலிருந்தவை அவரின் உதட்டிலே அறிவுரையாக வெளிவந்தன. காலத்துக்கு ஏற்ற முறையில் அவரின் அறிவுரை அமைந்தது:

"வாழ்க்கையில் ஒரு முறைதான் முதல் வகுப் பிற் சித்தி பெற முடியும் முதல் வகுப்பிற் சித்தி பெறுபவரே, 'முதல் வகுப்பிற் சித்தி பெற்றேன்' என்று வாழ்க்கை முழுவதும் சொல்லிக்கொள்ள முடியும். அவர் மனைவியாரும் அவ்வறிவுரையைக் கூறு வாள்; அவர் குழந்தைசளும் அதனைச் சொல்லுவர். மூன்றும் வகுப்பிற் சித்தி பெறும் ஒருவர் இறக் கும் வரை 'மூன்றும் வகுப்பிற் சித்தி பெற்றவர்' என்ற பெயருடனேயே வாழ்வார்; அந்தப் பெய ருடனேயே அவர் இறந்து படுவார். ஆகவே, 'உற் றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்' பாடங் களைக் கற்று முதல் வகுப்பிலே சித்தி பெறுதல் வேண்டும்" என்று அவர் அன்று கூறிய அறிவுரை இன்றும் என் நினைவில் நிலைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையப்பன் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் கற்று இடைநிலைப் பரீட்சைக்குத் தோற்றினேன். பரீட்சையில் முதலிடத்தைப் பெற்றுப் பரிசிலும் பெற்றேன், தமிழ்த்துறை விரிவுரையாளர்களின் பாராட்டுதல்களும் எனக்குக் கிடைத்தன. பேராசிரியர் மு. வ. அவர்களின் பாராட்டுதல்கள் என்னை மேலும் ஊக்குவித்தன. என்னுடன் கற்ற மாணவர் இருபத்துநான்கு பேர்; அவர்கள் என்மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். என்னுடன் சேர்ந்து பாடங்களைக் கற்பதற்கு விடுதியிலுள்ள எனது அறைக்கு அவர்கள் வந்து போவது வழக்கம்.

மூன்றுவது கல்வியாண்டு முடிந்து, கோடை விடுமுறை வந்தது, ''கோடை விடுமுறைக்கு இலங்கைக்குப் போகவில்லையா?'' என்று பேராசிரியர் மு. வ என்னைக் கேட்டார். ''போவதாக எண்ணமில்லை; இங்கேயே தங்கிவிட எண்ணுகின்றேன்'' என்று கூறினேன். ''அப்படியானல், விடுதியிலே தங்க வேண்டியதில்லை. எனது வீட்டிலேயே தங்கி நிற்கலாம். அங்கு வந்துவிடு'' என்று பணித்து, தமது இல்லமான 'தாயகம்' வருமாறு என்னை அழைத்தார். ''பேராசிரியர் மு. வ. அவர்களிடம் படிப்பதற்கு மட்டுமன்றி, அவரின் இல்லத்திலே தங்கியிருப்பதற்கும் வாய்ப்புக் கிடைத்ததே'' என்று எண்ணி எனது உள்ளம் உவகை கொண்டது.

'தாயகத்திலே, தங்கியிருந்தபோது மு.வ. அவர்களின் குடும்பத்தாரோடு நெருங்கிப் பழகுகின்ற நல் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தக் குடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திற் குறுகிய காலத்திலேயே யானும் ஓர் உறுப் பினனாகி விட்டேன். இன்னொரு வகையாகக் கூறின், அவர்கள், தங்கள் குடும்பத்தில் என்னையும் ஒருவ னாக்கி விட்டனர். மு. வ. அவர்களின் புதல்வர்க ளான அரசுவும் நம்பியும் பாரியும் என்னைத் தங் கள் அண்ணனாகவே மதித்து நடந்தனர். மு. வ. அவர்களின் பாரியாரும் தமது பிள்ளைகளைப் போலவே எனக்கும் அன்புகாட்டி உணவளித்தார்; உதவிகள் செய்தார்.

"அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க் கையின் பயன். அறநெறியில் இல்வாழ்க்கையை நடத் தினாற் போதும்; வேறு வழியிற் போய்ப் பெறத் தக்க பயன் ஒன்றும் இல்லை. அறத்தின் இயல் போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவனே வாழ முயல் கின்றவர்கள் எல்லோரிலும் தலையானவன்" என்ற வள்ளுவனின் கருத்துகளைத் தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் பேராசிரியர் மு.வ. அவர்கள். அதனைச் சொல்லளவிலன்றிச் செய லிலும் காட்டி இல்வாழ்க்கை நடத்தினர்.

"மற்றவர்களையும் நல்வழியில் வாழச் செய்து தானும் அறநெறியிலிருந்து தவறாமல் வாழவல்லது இல்வாழ்க்கை; ஆகையால் தாம் மட்டும் நன்மை அடைவதற்காகத் தவஞ் செய்வோரின் வாழ்க்கை யைவிடப் பிறர் நலம் கருதிய இல்வாழ்க்கை சிறப்பு டையதாகும்" என்ற திருக்குறளின் கருத்தை வலி யுறுத்தி வாழ்ந்து காட்டியவர் மு. வ. அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரதராசனூர் திருவள்ளுவர் சுரங்கத்திற் பன்முறை மூழ்கி மூழ்கிப் பலதிற மணிகளைத் திரட்டிக் கொணர்ந்தவர். அவருடைய நெஞ்சம் திருவள்ளுவர் நெஞ்சத்துடன் உறவாடி உறவாடிப் பண்பட்டது. அந் நெஞ்சினின்றும் அரும்பும் கருத்துச் சிந்தனைக்குரியதே" என்று பேராசிரியர் மு.வ. அவர்களைப் பற்றி, திரு.வி.க. அவர்கள் கூறியனவற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

▭ ▭ ▭

ஒரு நாள் மத்தியான உணவிற்கு அமர்ந்தோம். மு. வ. அவர்களின் பக்கலில் நான் அமர்ந்திருந்தேன். நம்பி என் வலது கைப் பக்கத்திலும், அரசுவும் பாரியும் மு வ. அவர்களின் இடது கைப் பக்கத்திலும் அமர்ந்திருந்தனர். மு. வ. அவர்களின் பாரியார் உணவைப் பரிமாறினர். முதன்முதல், உப்புத்தூள் வாழையிலையிலே இடப்பட்டது. அதன் பின் ஊறுகாய், துவையல், வறுவல், பொரியல் ஆகியன வைக்கப்பட்டன. அப்போது பேராசிரியர் ஒரு வினவை எழுப்பினர். "இலையிலே சோறு வைப்பதற்கு முன்னம் கறிகளை வைப்பதே தமிழ் மரபு. இதற்குக் காரணம் யாதெனத் தெரியுமா?" என்று கேட்டார். அவ்வாறு வினவை எழுப்பிய அவரே அவ்வினவிற்குரிய விடையையும் கூறினர் "இலையிற் பதார்த்தங்களை ஒவ்வொன்ருக வைக்கும்போது, அவற்றை ஒவ்வொன்ருக நாம் காண்கின்ருேம். அப்போது எமது நாவில் எம்மை அறியாமலே உமிழ்நீர் சுரக்கின்றது. சோற்றை இலையில் வைத்ததும் அவ்வாறு உமிழ்நீர் சுரப்பது அரிது. பதார்த்தங்களைப் பார்க்கும்போதுதான் உமிழ்நீர் நன்கு சுரக்கும்" என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாம் உண்கின்ற உணவு எளிதாகச் சீரணிப்பதற்கு உமிழ்நீர் உதவுகின்றது. உணவை மென்று தின்பதற்கும், உண்ட உணவு இனிது சீரணமாவதற்கும் உமிழ்நீர் அவசியமாகின்றது. இதற்காகவே பதார்த்தங்களை முதற்படைக்கின்றனர்,'' என்று மேலும் விளக்கமளித்தார் மு. வ. அவர்கள். சில வழக்கங்கள் நடைமுறையிலுள்ளன; அவ்வாறு அவை நடைமுறையில் உள்ளதற்காய காரணங்கள் என்ன என்பதைப் பலர் அறிய முற்படுவதில்லை என்பதனையே பேராசிரியர் விளக்க நினைந்தார்.

காகத்திற்கு உணவு வைத்த பின்னர் சாப்பிடுவது இன்னொரு வழக்கமாகும். காகம் தான் உண்பதற்கு முன்னர் 'கா, கா!' என்று கரைந்து ஏனைய காகங்களையும் அழைக்கின்றது; பகுத்துண்டு பாவனை செய்கின்றது. இதன்மூலம் காகம் மனிதர்களுக்கு நல்ல பாடம் ஒன்றையுங் கற்றுக் கொடுக்கின்றதல்லவா? ''எனது இனத்தை அழைத்து உணவைப் பகிர்ந்து உண்கின்றேன். அதேபோல மனிதர்களே! நீங்களும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புங்கள்.'' என்று காகம் தன் செயலால் அறிவுரை பகர்வதுபோல இருக்கின்றதல்லவா? மனிதர்கள் உண்கின்றபோது உணவைப் பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற அறிவுரையினை,

''காக்கை கரவாக் கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

என்று வள்ளுவர் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னெரு நாள் உணவு உண்பதற்கு அமர்ந்தோம். கறிகள் பரிமாறப்பட்டன. அப்போது பேராசிரியர் மு. வ. அவர்கள் என்னைப் பார்த்துக் "கறி சாப்பிடுவாயா?" என்று கேட்டார். எனக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. பேராசிரியரின் வினு என்னைத் திகைக்க வைத்தது. "சோறு சாப்பிடுவதற்குக் கறிகள் வேண்டுமே! கறிகள் இல்லாமற் சோற்றை எப்படிச் சாப்பிடுவது? வெறுஞ் சோற்றை மட்டும் உண்ண முடியுமா?" என்று எண்ணலானேன். பேராசிரியர் "கறி சாப்பிடுவாயா?" என்று கேட்கின்ருரே! ஏன் அவ்வாறு கேட்கின்ருர்! என்பதனைப் புரிந்து கொள்ளாமலே, "ஆம், கறி சாப்பிடுவேன்," என்று விடை கொடுத்தேன்.

சோற்றை வைத்ததும் அதனை மூன்று பிரிவாகப் பகுத்து வைத்து, ஒரு பகுதியைக் கறிகளோடும், மற்றையப் பகுதியைச் சாம்பாரோடும், எஞ்சியுள்ளதை இரசத்தோடும் சாப்பிடுவது தமிழகத்திலுள்ள வழக்கம். இந்த வழக்கம் யாழ்ப்பாணத் தமிழர்களிடையே இல்லாததொன்று. ஆகவே, முதலிற் கறிகள் பரிமாறப்பட்டதும் கறிகளோடு ஒரு பகுதிச் சோற்றை உண்பதனையே பேராசிரியர் கருதுகின்ருர் போலும் என்று எண்ணினேன். எனவே, "கறி சாப்பிடுவாயா?" என்று அவர் கேட்ட வினுவிற்கு "ஆம் சாப்பிடுவேன்", என்று பதில் கொடுத்தேன்.

"அப்படியா? ஆஞல், நாங்கள் கறி சாப்பிடுவதில்லை" என்ருர் பேராசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கறிகளோடு சாப்பிட்டுக் கொண்டே, தாம் கறி சாப்பிடுவதில்லை என்று கூறுகின்றாரே; என்னைக் கேலி செய்கின்றாரா?" என்று முதலிலே எண்ணி மலைத்தேன். பின்னர், "கறிகளோடு சாப்பிட்டுக்கொண்டே, கறி சாப்பிடுவதில்லை என்று கூறுகின்றீர்களே! என்றாற் புரிந்துகொள்ள முடியவில்லையே" என்றேன்

பேராசிரியர் கூறியது என்ன? நான் கருதியது என்ன? இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். அவ்வளவுதான்; நான் கூறியதைப் பேராசிரியர் புரிந்துகொண்டார்; பேராசிரியர் சொன்னதை நான் புரிந்துகொண்டேன். பேராசிரியர் இலையிலே இடப்பட்டிருந்த கறிகள் ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டினார். சுட்டிக் காட்டி, "இது வறுவல்; இது துவையல்; இது பொரியல்; இது மோர்க் குழம்பு" என்று கூறிக் கொண்டே போனார். "இவை யாவற்றையும் சேர்த்து, 'பதார்த்தங்கள்' என்று இங்குக் குறிப்பிடுகிறோம். 'பதார்த்தங்கள்' என்று நாங்கள் குறிப்பிடுவனவற்றை நீங்கள் இலங்கையிலே 'கறிகள்' என்று சொல்லுவீர்கள்" என்றார் பேராசிரியர்.

மேலும், 'கறி' என்பது 'மீன்' என்ற பொருளில் இங்கு வழங்குகின்றது. புலால் உண்பாயா? என்ற வினாவையே கறி சாப்பிடுவாயா? என்று கேட்டேன். "நாங்கள் புலால் உண்பதில்லை; மரக்கறிகளையே உண்போம்" என்று சிரித்துக்கொண்டே மு. வ. கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், ''மரக்கறி என்று சொல்லும்போது, அதிலே 'கறி' என்பது மீனைக் குறிப்பிடாது, 'காய் கறி' என்று சொல்லும் போது, அதிலும் 'கறி' என்பது 'மீன்' என்ற பொருளைத் தராது. ஆனால், 'கறி' என்று மட்டும் சொல்லும்போது, அச்சொல் 'மீன்' என்ற பொருளிலே தமிழ்நாட்டிற் பரக்க வழங்குகின்றது'' என்று மேலும் விளக்கிச் சொன்னார்.

''நானும் கறி உண்பவன் அல்லன்; மரக்கறிகளையே உண்பவன். இலங்கையிலும், மீனைக் 'கறி' என்று கூறும் வழக்கு உண்டு. உதாரணமாக மீன் கடையைக் 'கறிக் கடை' என்றும், மீன் வாங்கி வா' என்பதைக் 'கறி வாங்கிவா' என்றும் கூறுவர். ஆனால், 'கறிகள்' என்னும்போது, அது பொதுவாக எல்லாக் கறிகளையும் குறிக்கும். ஆயினும், கறிகளைப் 'பதார்த்தம்' என்று கூறுகின்ற வழக்கு இலங்கையில் இல்லை'' என்று எடுத்துச் சொன்னேன்.

'' ஆகவே, சொற்களின் வழக்காற்றைப் பொறுத்து அவற்றின் பொருள்களும் மாறுகின்றன,'' என்று பேராசிரியர் மு. வ. கூறிமுடித்தார்.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

என்ற வள்ளுவரின் குறள் நினைவுக்கு வந்தது. இதுகாறும், செவிக்குச் சுவையான உணவு வழங்கிய நாம், வயிற்றுக்கும் உணவளிப்பதில் ஈடுபட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாண்டுகள் முடிந்து, இறுதித் தேர்வையும் எழுதி முடித்தேன். இலங்கைக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தேன். இலங்கைக் குப் புறப்படுவதற்கு முதல் நாள், மாலை ஆறு மணி யிருக்கலாம். ''வெளியே உலாவி வருவோம்'' என்று மு. வ. என்னை அழைத்தார். இருவரும் ஒரு கல் தூரம் நடந்து சென்றோம். மணல்மேடு ஒன்றின் மேல் அமர்ந்து நீண்ட நேரம் உரையாடிக்கொண் டிருந்தோம். நிலவொளியில் அவர் முகம் எனக்கு நன்றாகத் தெரிந்தது அவர் பேசும்போது, விழுமிய பல அறிவுரைகளை அவ்வப்போது கூறிக்கொண்டே போனார். அவற்றுள் ஒன்று, இன்னும் என் நினைவி லிருக்கிறது; 'தம்பிக்கு' என்ற அவரது நூலிலும் அந்த அறிவுரை இடம் பெறுகின்றது:

'' நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது;
வல்லவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா?
நன்மை வன்மை இரண்டும் இருந்தாற்றான்
இந்த உலகில் வாழ்வுக்கு இடமுண்டு''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. சாப விமோசனம்

வேட்டையாட வேண்டும் என்று தசரதன் விருப்பங் கொண்டான்; கையில் வில்லேந்திக் கானகஞ் சென்முன். மிருகங்களைத் தேடி அங்கும் இங்கும் அலைந்தான்; மிருகங்கள் எவையும் அவன் கண்களுக்குத் தென்படவில்லை. அலைந்து திரிந்த தசரதன், இறுதியில், மிருகங்கள் தண்ணீர் பருகுவதற்கு வரும் ஒரு நதிதீரத்தைச் சென்றடைந்தான். அங்கே அம்பும் வில்லுந் தாங்கி, ஒரு மரத்தின் மறைவிற் பதுங்கியிருந்தான்; எங்கும் நிசப்தம் நிலவியது.

அப்போது, ஆற்றோரமாகச் சிறிது தூரத்திலே எழுந்த ஓசை ஒன்று தசரதன் செவிகளில் விழுந்தது. அந்த ஓசையைத் தசரதன் உற்றுக் கேட்டான். யானை நீர் பருகுகின்ற ஓசைபோல ஒலித்தது. 'யானையே நீர் பருகுகின்றது' என்ற முடிவுக்கு வந்தான். சத்தவேதி என்னும் வித்தையில் வல்ல தசரதன் அவ்வோசை எழுந்த இடத்தை இலக்காகவைத்து அம்பைவிட்டான். 'விர்' என்ற ஓசையோடு அம்பு விரைந்து சென்றது. அவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்; அம்பு சென்று சேர்ந்த திசையில் 'அம்மா!' என்ற அவல ஒலி எழுந்தது. 'இந்தக் குரல் அம்பு பட்ட யானையின் குரலன்று; மனிதக்குரலே' என்று தசரதன் துணிந்தான்; தளர்ந்து மனம் நொந்தான். அவல ஒலி எழுந்த திசையை நோக்கி ஓடோடிச் சென்றான்.

ஓடிச் சென்ற தசரதன், அவலக் காட்சி ஒன்றைக் கண்டு ஏங்கி நின்றான். முனிகுமாரன் ஒருவன் நிலத்திலே உருண்டு புரண்டுகொண்டிருந்தான். நீர் மொள்ளும் பாத்திரம் ஒன்று அவன் பக்கலிற் கிடந்தது. தசரதன் என்ன சொல்வது, என்ன செய்வது என்று அறியாது அவதியுற்றான். உடல் நடுங்கியது; உள்ளம் பதறியது; உதடுகளிலிருந்து சொற்கள் வர மறுத்தன. குரல் நடுங்க, கண்ணீர் பெருக, "மகனே நீ யார்? ஏன் இங்கே வந்தாய்?" என்று மன்னவன் பரிவோடு கேட்டான்.

"அரசனே! எனது பெயர் சுரோசனன். எனது தந்தையார் பெயர் சலபோசனன். எனது பெற்றோர் இரு கண்ணுமில்லாத குருடர். அவர்களைப் பேணிக்காப்பது எனது பணி அவர்களின் தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் எடுத்துச்செல்ல இங்கே வந்தேன். ஆற்று நீரிலே குடத்தை அமிழ்த்திப் புனலை மொண்டிடும் ஓசையைக் கேட்டபோது யானை நீர் பருகுவதுபோல உன் செவிகளில் விழுந்ததுபோலும்! யானையே என்று நினைத்தாய்; அம்பினால் எய்துவிட்டாய். தெரியாமற் செய்த பிழை; ஆகையால், உன்மீது தவறில்லை. நீ வருந்த வேண்டா," என்று குற்றுயிராய்க் கிடந்த குமாரன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்ணீர்த் தாகத்தால் என் பெற்ருேர் வருந்துகின்றனர். இக்குடத்திலே தண்ணீரை மொண்டு சென்று, அவர்களின் தாகத்தைத் தணித்து, என் சாவையும் உரைத்தல் வேண்டும். இன்னும், உங்கள் புதல்வன் தேவலோகத்திற்குச் செல்லுங்கால், உங்களைத் தொழுது அஞ்சலி செய்தான் என்றும் சொல்லுதல் வேண்டும்" என்று அவலக் குரலில் வேண்டினுன். அவ்வளவில் அவன் உடலிலிருந்து உயிர் பிரிந்தது இச்சோகக் காட்சியினை,

உண்ணீர் வேட்கை மிகவே
 புயங்கும் மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென்
 சாவு முரைத்தும் புதல்வன்
விண்மீ தடைவான் ருெழுதா
 னெனவு மவர்பால் விளம்பென்
றெண்ணீர் மையினுன் விண்ணே
 ரெதிர்கொண் டிடவே கினனுல்.

என்றவாருகக் கம்பன் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளான்.

முனிகுமாரனின் உடலிலிருந்து உயிர் நீங்கியதைக் கண்டு, தசரதன் துன்பக் கடலில் மூழ்கி வேதனை அடைந்தான்; 'என்னைப் பெற்ருேரிடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு' என்று சுரோசனன் கேட்டுக் கொண்டதை நிறைவேற்றத் துணிந்தான். அம்பு தைத்து விழுந்து இறந்து கிடந்த முனிகுமாரனைத் தூக்கித் தோள்மீது இட்டுக் கையால் அணைத்துக் கொண்டான். மறு கையாலே தண்ணீர்க் குடத்தைத் தூக்கினுன். முனிகுமார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் பெற்ருேர் இருக்குமிடத்தை நோக்கி விரைந்தான்.

யாரோ வருகின்ற காலோசை கேட்டது. தங்களின் மகனே தண்ணீருடன் வருகின்ருன் என்று பெற்ருேர் நினைத்தனர் "மகனே! சென்று வெகு நேரம் கழிந்தமையால் உனக்கென்ன நடந்ததோ என்றெண்ணிப் பயந்துவிட்டோம். எங்களைத் தழுவிக் கொள்ளப்பா." என்று சலபோகனன் கூறினுன்.

தசரதனின் உடல் நடுங்கியது; கண்களிலே கண்ணீர் ததும்பியது; நிகழ்ந்ததைச் சொல்ல வாயைத் திறந்தான்; சொற்கள் வர மறுத்தன. இறுதியில், ஒருவாறு சோகம் நிறைந்த குரலில், "சுவாமி, நான் உங்கள் மகன் அல்லன். அயோத்தி மாநகரத்தைச் சேர்ந்தவன், ஓர் அரசன். கொடிய விலங்குகளை வேட்டையாடக் காட்டுக்கு வந்தேன். அவை தண்ணீர் குடிக்க ஆற்றங்கரைக்கு வரும் போது அவற்றை வேட்டையாடலாமெனக் கருதி மரங்களின் பின்னே மறைந்திருந்தேன். அப்போது, பொய்ம்மையே பேசாது மெய்ம்மையே பேசுகின்ற உமது புதல்வன், குடத்திலே ஆற்று நீரைமொள்கின்ற சத்தம் கேட்டது. அதனை யானை தண்ணீர் பருகுகின்ற ஓசையென நினைத்தேன். ஓசையெழுந்த இடத்தை இலக்காகக் கொண்டு, இலக்குப் பொருளைக் காணுமலே அம்பை எய்தேன். அப்போது, அம்பாலே தைப்புண்டு அலறுகின்ற மனிதக் குரல் கேட்டது நான் இலக்காகக் குறித்தது வேழமன்று; மனிதனே என்று துணிந்தேன். உள்ளம் துடிதுடித்தேன். செய்வதறியாது திகைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்; நடுங்கினேன். அவலக்குரல் எழுந்த இடத்தை நோக்கி ஓடிச்சென்று பார்த்தேன். அம்பினலே தாக்குண்டு நிலத்திற் புரண்டு கொண்டிருந்த உங்கள் மகனைக் கண்டேன்; நடந்ததை உணர்ந்தேன். அவனும் தன் செய்தியைத் தெரிவித்து மேலுலகஞ் சென்றான்'' என்று சொன்னன்.

தசரதன் சொல்லியவை அவன் உள்ளத்திலிருந்த சோகத்தை அப்படியே புலப்படுத்தின. கலங்கிய உள்ளம்; கவலை தோய்ந்த முகம்; கண்ணீர் நிறைந்த கண்கள். இந்தக் கோலத்தோடு தசரதன் முனிவனுடைய பாதங்களில் அடியற்ற மரம்போல வீழ்ந்தான்; அலறினன். பின்னர் எழுந்து நின்று கவலையோடு சொன்னன்;

''சுவாமி, அம்பினற் கொன்றேன் என்று அடியேனைக் கோபித்திடாதிருக்க வேண்டுகின்றேன். யான் ஒரு பிழையும் செய்திலேன்; யானை தண்ணீர் பருகும் ஓசையென்று, நீர் முகக்கின்ற சத்தத்தின் மேல் அம்பெய்தேன். கண்களால் இலக்குப் பொருளைக் காணுமலே அம்பை எய்துவிட்டேன். கண்டு செய்த பிழையன்று; காணுது செய்த பிழை. என்னைப் பொறுத்தருளல் வேண்டும்.''

தசரதனின் சோகச் செய்தி, காப்பியத்தைச் செய்த கம்பனின் கவிதை உள்ளத்தையே கலக்கியது. சோகக் கடலில் மூழ்கித் தன்னையே மறந்தான். தசரதனுடைய துன்ப நிலையையும் அவன் வாயிலிருந்து வெளிவந்த சொற்களையும் சோகவுணர்ச்சி தோன்றச் சொல்லோவியமாகத் தீட்டினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுத்தாய் கனையா லெனவே
யடியேன் றன்னை யையா
கறுத்தே யருளா யானே
கண்ணிற் கண்டே னல்லேன்
மறுத்தா னில்லான வனமொண்
டிடுமோ தையினெய் ததலாற்
பொறுத்தே யருள்வா யென்னு
விரு தாள் சென்னி புனைந்தேன்.

மகன் இறந்தான் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே சலபோசனும் அவன் மனைவியும் நிலத்திலே உயிரற்ற உடல்போல வீழ்ந்தனர், உடலும் உளமும் சோர்ந்தனர். நிலத்திற் புரண்டு புரண்டு கதறினர். ''எமது மகன் எமக்குக் கண்களாக இருந்தான் அவனை. இன்று இழந்தோம். இன்றே எமது கண்களும் பார்வையை இழந்தன. குழந்தாய், நீ எங்கள் உள்ளத்தையே பிளந்து விட்டாய். எங்களைப் பிரிந்து வானுலகுக்குச் சென்றுவிட்டாய். நீ அங்கே வாழ்ந்து கொண்டிருக்க, நாம் இங்கே வாழ்ந்திருக்கப் போவதில்லை. உன் பிரிவை எங்களாற் பொறுத்துக் கொள்ளவே முடியாது, மகனே! எங்களையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு போகத் தவறிவிட்டாயே! இதோ, நாங்களும் உன்னுடன் வருகின்றோம். இங்கு நாம் மூவரும் வாழ்ந்திருந்தது போலவே, அங்கும் நாம் மூவரும் சேர்ந்து வாழ்வோம்.'' என்று புலம்பி அழுதனர்.

வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார்
விழிபோ யிற்றின் றென்று
ராழ்ந்தார் துன்பக் கடலு
ளையா வையா வென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போழ்ந்தாய் நெஞ்சை யென்றார்
பொன்னு டதனிற் போய்நீ
வாழ்ந்தே யிருப்பத் தரியேம்
வந்தேம் வந்தே மென்றார்.

அம்புபட்டுப் புதல்வன் வீழ்ந்து பட்டதைத் தசரத மன்னன் வாயிலாகக் கேள்வியுற்ற பெற்றோர்கள் அடைந்த துன்பத்தை இப் பாடல் சோகவுணர்ச்சியுடன் சித்திரிக்கின்றது.

முனிவனும் அவன் மனைவியும் குருடர்கள். அவர்களின் மகன் அவர்களுக்குக் கண்போலிருந்தான். அதனுற் கண்ணில்லாமல் இருந்தும் கண்ணுள்ளவர்போல் வாழ்ந்தனர். கண்போலிருந்து கருத்தோடு பேணிவந்த அவர்களின் மகன் இறந்து பட்டான். எனவே, முனிவனுக்கும் மனைவிக்கும் 'விழி போயிற்று' என்று கம்பன் வருணித்தான்.

மகனை இழந்த பெற்றோரின் அவலநிலை, தசரத மன்னனைச் சொல்லொணுத் துயரத்துக்குள்ளாக்கிற்று. கண்ணில்லாத பெற்றோருக்குக் கண் போலிருந்த மைந்தனைக் கொலைசெய்துவிட்டேனே' என்று நினைந்து தசரதனின் உள்ளங் கலங்கியது; அதே நேரத்திற் 'கண்ணில்லாத முனிவனும் மனைவியும் காட்டிலே துணையில்லாது துன்பப்படப் போகின்றனரே என்று அவன் மனம் வருந்தியது. துன்பச்சுமையோடு முனிவன் பாதங்களில் விழுந்து வணங்கிச் சொல்லத் தொடங்கினன்.

''இன்று முதலாக யானே உங்கள் மகன், நீங்கள் கட்டளையிடுவனவற்றையெல்லாம் உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் எவ்வாறு செய்தானோ அவ்வாறே யானும் செய்வேன். சிறிதும் உள்ளம் சோர்வடைந்து வருந்தாதீர்கள்.'' என்று சொல்லிப் பணிவோடு வேண்டி நின்றான் தசரதன்.

''கண்ணிலுள்ள கருமணிபோன்ற அருமை மகனை இழந்தோம். இனி, உயிர் வாழ்வதாற் பயனேயில்லை. மகனை இழந்த பின்னர் உயிருடன் வாழ்வதெப்படி? உயிருடன் வாழவும் முடியாது; பிரிந்த மகனை இனிப் பெறவும் முடியாது. உயிர் வாழ்வதை விடுத்து விண்ணுலகத்திற்குப் போய்விடுவோம்'' என்று அம்பு தைத்த மான் போலப் பதைபதைத்து முனிவன் சொன்னான்.

இவ்வாறு முனிவனும் அவன் மனைவியும் புத்திர சோகத்தால் வருந்தினர். அதே நேரத்திலே கண் போன்ற குமாரனை மன்னன் கொன்று விட்டானே என்று சலபோசனன் சினங்கொண்டான். முனிவன் தவத்தாற் சிறந்தவனல்லவா?

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

என்பது வள்ளுவன் கூற்று. எனவே, சோகத்தால் எழுந்த சினத்தோடு மன்னவனை விழித்து முனிவன் நோக்கினான். "மன்னனே! மகனை இழந்து இன்று நாம் வருந்துகின்றோம். அது போன்று, உன் மகனும் உன்னை விட்டுப் பிரிவான். அந்தப் பிரிவைப் பொறுக்க முடியாமல் நீ உயிர் விடுவாய்'' என்று சாபமிட்டான்.

முனிவன் சொன்னவற்றைத் தசரதன் கேட்டுக் கொண்டு நின்றான். ஒரு புறத்திற் பொறுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத சோகம்; மறுபுறத்தில் என்ன நிகழுமோ என்ற பயம். இரண்டுக்குமிடையே அவன் உள்ளம் ஊசலாடியது.

''தவறு செய்துவிட்டேன். உனக்கே அடைக்கலம், என்னை மன்னித்துவிடு என்று கேட்கின்றாய். ஆம். நீ உன் பிழையை உணர்ந்துகொண்டாய். உனக்குக் கொடிய சாபத்தையிட நான் விரும்பவில்லை. அருமை மகனை இழந்து நாம் உழல்கின்றோம். அருமை மகனை இழந்ததால் எமது உயிரும் பிரியப்போகின்றது. துன்பத்தின்மேல் துன்பம்; கொடிய துன்பம்'' என்று முனிவன் மேலும் கூறினான்.

''எமது மகன் இறந்தான். அதனால் நாமும் இறக்கின்றோம். உன் மகன் இறக்கமாட்டான். ஆனால், உன்னைப் பிரிந்து செல்வான்; அப் பிரிவைப் பொறுக்க முடியாது துன்பப்பட்டு, அந்தத் துன்பத்துக்கேயாளாகி இறந்துபடுவாய் இன்று நாம் எவ்வாறு துன்பப்பட்டு மாழ்கின்றோமோ, அதே போல நீயும் துன்பப்பட்டு மடிவாய்'' என்று கூறி முனிவன் உயிர் நீத்தான், அதனைக் கண்டு அவன் மனைவியும் உயிர் துறந்தாள்.

தாவா தொளிருங் குடையாய்
தவறிங் கிதுநின் சரணங்
காவா யென்று யதனாற்
கடிய சாபங் கருதே
மேவா மகவைப் பிரிந்தின்
றெம்போ லிடருற் றனைநீ
போவா யகல்வா னென்னாப்
பொன்னாட் டிடைபோ யினரால்.

KALUWANCHIKUDY ... LIBRARY (stamp)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவன் இட்ட சாபத்தையும், இறுதியில் முனிவனும் அவன் மனைவியும் உயிர் துறந்த முறையையும் இப் பாடல் சோகவுணர்ச்சி பெருக இனிது வருணிக்கின்றது.

முனிவனின் கொடிய சாபத்தால், தசரதன் சிந்தை தளர்ந்தானல்லன்; மகன் பிரிந்துவிடுவான் என்று ஏங்கினனுமல்லன். மகன் ஒருவன் இருந்தாற்றானே அதனை நினைத்துத் தசரதன் ஏங்க வேண்டும்; மகன் பிரியவுள்ள அந்தச் சூழ்நிலையைக் கற்பனை செய்து கலங்க வேண்டும். இவற்றுக்கு மாருக அவன் உள்ளத்தில் உவகை பொங்கியது; என்றுமில்லாத பெருமகிழ்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அகத்தில் எழுந்த மகிழ்ச்சி அவன் முகத்திலே தெரிந்தது.

தசரதன் அவ்வாறு மகிழ்ச்சியடையக் காரணம் யாது? தசரதன் புத்திரப்பேறில்லாமற் கவலையோடு வாழ்ந்தவன். மகன் ஒருவன் இல்லையே என்று கலங்கியவனுக்கு முனிவனின் சாபம் உள்ளத்தில் என்றும் ஏற்படாத நம்பிக்கையொன்றை ஏற்படுத்தியது. மகன் ஒருவன் பிறக்கப்போகின்றுன் என்பதே அந்த நம்பிக்கை. அதனுல் அவன் உள்ளம் உவகை கொண்டது; எல்லையில்லாத உவகை கொண்டது. சாபத்தின் காரணமாக உயிர் துறக்க வேண்டி ஏற்படுமே என்ற எண்ணம் அவனுக்கு எள்ளளவும் எழவில்லை. அதற்கு மாருக மகன் ஒருவன் பிறக்கப் போகின்றுனே என்ற மகிழ்ச்சியே உள்ளத்திலே தலையெடுத்து நின்றது. துன்பத்தை மறந்தான்; இன்பத்திலே திளைத்தான். சாபத்திலும் ஒரு விமோசனத்தைக் கண்டான்; அரண்மனையை நோக்கி விரைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. செருப்புத் தேய்ந்துவிடுமே!

கொழும்பு மாநகரசபை எல்லைப் புறத்தில் அமைந்திருந்தது அந்த வீடு. பிரதான வீதியிலிருந்து, ஒழுங்கை வழியாகவே அந்த வீட்டிற்குப் போக வேண்டும். அந்த ஒழுங்கையில் மின் விளக்குகளுமில்லை; கடைகளுமில்லை. ஏதாவது சாமான் வாங்க வேண்டுமானால், அரை மைல் தூரம் நடந்தே பிரதான வீதிக்கு வருதல் வேண்டும்.

அது ஒரு மாடி வீடு. மேல் மாடியிலே படுக்கை அறையும், சமையல் அறையும், அமர்ந்து பேசுவதற்கான பொது அறையும் இருந்தன. மேல்மாடியிலும் பார்க்கக் கீழ்வீடு பெரியது. படுக்கை அறைகள், விசாலமான சமையல் அறை, பொது அறை ஆகியவற்றைக் கொண்டதாக அது அமைந்திருந்தது. இரண்டு குடும்பங்களுக்கும் பொதுவான ஒரு மலசல கூடமும் ஒரு தண்ணீர்க் கிணறும் இருந்தன.

அந்த வீட்டுக்குப் பல ஆண்டுகளாக வெள்ளை அடிக்கவில்லை என்பதைப் பார்த்தவுடனேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. வேயப் பட்டிருந்த ஓடுகள் மிகப் பழமையானவை. அவற்றிலே சில உடைந்து காணப்பட்டன; சில கீழே விழுந்து கிடந்தன. சாளரங்களின் கண்ணாடிகள் வெடித்தும் கதவுகளிலே சில உடைந்தும் இருந்தன. சுவர்களின் ஓரமாகக் கறையான் புற்றெடுத்துக் குடியிருந்தது.

வீட்டின் வெளிப்புறமாக அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டு வழியாகவே மேல் மாடிக்குப் போக வேண்டும். ஏறுவதற்கான அந்தப் படிக்கட்டுக்குக் கூரையில்லை. மழைக் காலத்திலே குடையைப் பிடித்துக்கொண்டு மெல்லமெல்ல ஏற வேண்டும். வெய்யிற் காலத்திற் செருப்பு அணியாமல் அடியெடுத்து வைக்க முடியாது; சூட்டினாலே கால் வெந்துபோகும்.

அந்த வளவுக்குள்ளே சில தென்னை மரங்கள் நின்றன. அவை காய்த்து ஓய்ந்த கிழ மரங்கள்; உயர்ந்து வளர்ந்து வானத்தைத் தொட்டு நின்றன, சிறிய கீற்றுகளைத் தவிர, அந்த மரங்களிலே குரும்பைகளுமில்லை; தேங்காய்களுமில்லை. இன்னும், அந்த வளவுக்குள் வேறு இரண்டு மரங்கள் நின்றன. ஒன்று கறிவேப்பிலை மரம்; மற்றொன்று மாமரம். முன்னையது இலைகளே இல்லாத முண்டம்; பின்னையது பூப்பதுமில்லை; காய்ப்பதுமில்லை.

வேலியில்லாத அந்த வளவுக்குள்ளே புல் அடர்ந்து வளர்ந்திருந்தது. மலசல கூடத்துக்கு அல்லது கிணற்றுக்குப் போக வேண்டுமானால் கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தூக்கித் தூக்கி வைத்தே நடக்க வேண்டும். இரவுக் காலமானுற் கையிலே விளக்கைப் பிடித்துக் கொண்டு கவனமாகப் போக வேண்டும் ஏனெனில், அங்கே பாம்பும் வரும்; தவளையும் தத்தும். ஒருவர் துன்பத்தால் அவதியுறுதலை 'பாம்பின் வாய்த் தேரைக்கு' ஒப்பிடுவார்களல்லவா? பாம்பின் வாயி லகப்பட்ட தேரைபடுகின்ற துன்பத்தைப் பலர் நேரிலே பார்த்திருக்க மாட்டார்கள். ஆனுல், அந்த வளவுக்குள் இந்த அவலக் காட்சியை அடிக்கடி காணலாம். அந்த வீட்டிலே இரண்டு குடும்பங்கள் வாழ்ந்தன. வீட்டின் சொந்தக்காரனுன கஞ்சனும் அவன் மனேவியும் மாடி வீட்டிலே குடியிருந்தனர். அரசாங்கத் திணைக்களம் ஒன்றிலே வேலைசெய்யும் அறிவொளியும் அவனது மனைவி மக்களும் கீழ்வீட் டிலே வசித்தனர். இன்னெரு வகையாகக் கூறின், வசதியான பெரிய வீட்டை வாடகைக்குக் கொடுத் துவிட்டு, வசதிகள் குறைந்த மேல் மாடியில் வீட் டுச் சொந்தக்காரன் குடியிருந்தான்.

கஞ்சன் நாய் ஒன்றை வளர்த்தான். ''இது எனது நாய்; கண்ணை இமை காப்பதுபோல வீட் டைக் காத்துக் கொள்ளும். இதைப்போல ஒரு நாயை நான் பார்த்ததே கிடையாது'' என்று அந்த நாயைப் பற்றிப் பெருமையாகக் கஞ்சன் பேசிக்கொள்வான். 'எங்கள் வீட்டு நாய்' என்று அவன் மனைவியும் உரிமை பாராட்டுவாள். ஆனுல், வீட்டில் வாடகைக்கு இருந்தவர்களே அந்த நாய்க்கு உணவு கொடுத்துப் பேணினுர்கள். நாய் நன்றியுள்ள மிருகம் அல்லவா? உரிமை பாராட் டியவர்களுக்கும் வாலைக் குழைத்தது; உணவளித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்களுக்கும் வாலைக் குழைத்து நன்றியைக் காட்டியது.

கஞ்சனுக்கும் அவன் மனைவிக்கும் பல ஆண்டுகளாகப் பிள்ளைகளில்லை. பிள்ளைச் செல்வத்தை வேண்டி அவர்கள் மேற்கொள்ளாத தல யாத்திரைகளுமில்லை; செய்துமுடிக்காத நேர்த்திக் கடன்களுமில்லை. ஆனால், அவர்கள் நினைத்தபடி எதுவும் நடைபெறவில்லை. ''உனது குடும்பமே பிள்ளைப் பேறு இல்லாதது. நான் என்ன செய்வேன். விதியை வெல்ல யாரால் முடியும்'' என்று கஞ்சன் தனது மனைவிமேற் பழியைச் சுமத்தி வந்தான்.

குழந்தைகளின் கைகளால் அளாவப்பட்ட உணவு அமிழ்தினும் இனியது. அவர்களின் உடம்பைத் தீண்டுதலும் இன்பம்; அவர்களின் குதலை மொழிகளைக் கேட்டலும் இன்பம்.

> அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
> சிறுகை யளாவிய கூழ்.
>
> மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
> சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

வள்ளுவன் அனுபவித்த இவ்வின்பங்களை அறியாமலே கஞ்சனும் அவன் மனைவியும் வாழ்ந்தனர்.

பணத்தைத் தேடி இன்பங் காண்பதிற் கஞ்சனுக்கும் அவன் மனைவிக்கும் இருந்த ஆசைக்கு அளவேயில்லை. இனிய உணவுகளை உண்பதுமில்லை; நல்ல உடைகளை அணிவதுமில்லை, அழிவில்லாத அறத்தைச் செய்யவேண்டும் என்றும் அவர்கள் எண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதுமில்லை. பொன்னையும் பொருளையும் சேர்ப்பதி லேயே பெரும் இன்பத்தைப் பெற்றனர்.

''உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார் – கொடாஅது
வைத்தீட்டினார்...........''

செல்வம் பெருகியது. ஆனால், செல்வம் பெருகிய அளவிற்கு அவர்களின் உள்ளம் வளரவில்லை. அவர்கள் வாழ்ந்த வீட்டின் அலங்கோலக் காட்சியும், அந்த வீடு அமைந்திருந்த வளவின் கோலமும் அதற்குச் சான்றுகளாக அமைந்திருந்தன.

கீழ் வீட்டிலே குடியிருந்த அறிவொளியின் வாழ்க்கை, முற்றிலும் வேறுபட்டது. அறிவொளிக்கும் அவர் மனைவியாருக்கும் நான்கு குழந்தைகள் இருந்தனர்; அவர்கள் குழந்தைகளால் வரும் இன்பத்தை அனுபவித்து வாழ்ந்தனர். இரந்து வருவோர்க்கு இல்லையென்னாது அறஞ்செய்து இல்லறம் நடாத்தினர். செல்வம், யாக்கை என்பன நிலையில்லாதன; கல்விச் செல்வமே மேலானது. ''கேடில் விழுச் செல்வங் கல்வி'' என்ற உண்மையை உணர்ந்து வாழ்ந்தார்கள். எனவே, குழந்தைச் செல்வத்தை மேலானதெனக் கருதிக் குழந்தைகளுக்கு இனிய உணவுகளை ஆக்கிக் கொடுத்தனர்; நல்ல உடைகளை வாங்கிக் கொடுத்தனர். தமது வருமானத்தின் பெரும்பகுதியைப் பிள்ளைகளின் கல்விக்காகவே செலவுசெய்தனர்.

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

என்ற வள்ளுவன் அறிவுரைக்கு அமைந்து வாழ்ந்தனர்.

▭ ▭ ▭

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை விடுமுறை வந்தது. வீட்டைப் பூட்டிக் கொண்டு குழந்தைகளோடு கீழ்வீட்டார் யாழ்ப்பாணம் சென்றுவிட்டனர். ஒவ்வோர் ஆண்டும் மார்கழி விடுமுறைக்கு அவர்கள் யாழ்ப்பாணம் சென்று விடுவது வழக்கம். அவர்கள் யாழ்ப்பாணத்திலே தங்கி நிற்கும் அந்த மாதம் முழுவதும் வீடு பூட்டியே கிடக்கும். வீட்டிலே பெறுமதியுள்ள பொருள்களுமில்லை; பொன்னுலான ஆபரணங்களுமில்லை. எனவே, அந்த வீடு பூட்டியிருப்பதைப் பற்றிக் கவலைகொள்வார் எவருமில்லை. பொன்னும் பொருளும் இருந்தாற்முனே கள்வருக்குப் பயப்பட வேண்டும்!

கஞ்சனுடைய வீடு அப்படியானதன்று. அங்கே பணம் உண்டு; பெறுமதியுள்ள ஆபரணங்களும் உண்டு. இது பலருக்குத் தெரிந்த விடயம். எனவே, அந்த வீட்டுப் பக்கமாகப் போகின்றவர்கள் அந்த வீட்டை ஒரு முறை கவனமாகப் பார்த்துவிட்டே போவர்.

அறிவொளியும் அவர் குடும்பத்தாரும் யாழ்ப்பாணம் சென்ற பின்னர், நாய்க்கு உணவு கொடுப்பார் எவருமிலர். அந்த நாய் இரவெல்லாம் உணவுக்காக அலைந்து திரியும். காலையிலே வீட்டுக்கு வந்து படிக்கட்டிலே ஏறிப் படுத்துவிடும்.

யாழ்ப்பாணம் சென்றிருந்த அறிவொளிக்கு விடுமுறை முடிந்தது; குடும்பத்தோடு கொழும்புக்குத் திரும்பினுர். வாடகைக்கு அமர்த்திய வண்டியொன்றிலே கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து வீட்டைநோக்கிக் குடும்பத்தோடு புறப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார். வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது, அதிகாலை ஐந்து மணியிருக்கும். அந்த நேரத்திலே வழமைக்கு மாருக மாடி வீட்டிலே மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பொலிசார் வீட்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தனர். பொலிசாரின் மோட்டார் வாகனமும் அங்கே நின்றது. அறிவொளிக்கு உடல் நடுங்கியது.

படிக்கட்டு வழியாக மேலே ஏறிச்சென்ருர். அங்கே அவர் கண்ட காட்சி அவரைத் திகைக்க வைத்தது. இரத்த வெள்ளத்திலே கஞ்சன் கிடந்தான். அவனின் மனைவியார் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி கொடுத்தாள் "தேடிவைத்த பொருள்கள் எல்லாம் போய்விட்டனவே; தாலிக் கொடியையும் பறிகொடுத்தேனே; நகைகளையும் இழந்தேன்; கணவனும் கொலையுண்டான்." என்று கதறி அழுது கண்ணீர்விட்டாள். பரிதாபமான காட்சி. அப்போது முன்னெருபோது நடந்த சம்பவம் அறிவொளியின் மனக்கண்முன்னே வந்தது. அது கஞ்சனுக்கும் அவன் மனைவிக்குமிடையே நடந்த ஓர் உரையாடல்.

▭ ▭ ▭

மாலை நேரம். கதிரவன் குடதிசையிலே மறைந்து கொண்டிருந்தான். மழை பெய்துகொண்டிருந்தது. மறுதினம் பொங்கல் திருநாள். பொங்கற் பெருநாளைக் கொண்டாடுவதற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் வாங்கிக்கொண்டு எல்லோரும் தத்தம் இல்லங்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கற் பெருவிழாவை ஆண்டுதோறும் கோலாகலமாக அறிவொளி கொண்டாடுவார். இவ்வாண்டும் அதற்கு வேண்டிய ஒழுங்குகளை யெல்லாம் செய்துகொண்டிருந்தார். பொங்கல் விழாவிற்கான ஒழுங்குகள் மாடி வீட்டிலும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அரிசி, பழம், பாக்கு, வெற்றிலை, கரும்பு, இஞ்சி, மஞ்சள் என்பனவற்றைக் கஞ்சனின் மனைவியே கடைத் தெருவிற்குச் சென்று வாங்கி வந்தாள். கலியாண வீட்டிலே தாலிகட்ட மறந்ததுபோல, ஒன்றைமட்டும் அவள் வாங்க மறந்துவிட்டாள் அதுதான் சுவாமிக்கு எரிப்பதற்கான கற்பூரம். கணவனைக் கூப்பிட்டு, ''கற்பூரம் வாங்கிவர மறந்துவிட்டேன். இருண்டுவிட்டது: கடைத்தெருவுக்குச் சென்று கற்பூரம் வாங்கி வாருங்கள்'' என்று கூறினாள்.

''எல்லாச் சாமான்களையும் வாங்கிவிட்டுக் கற்பூரத்தை மட்டும் மறந்துவிட்டாய். இப்போது என்னைக் கடைக்குப்போய் வாங்கி வா என்று கத்துகிறாய். வயது முதிர்ந்த கிழப் பருவத்திலே இந்த இருட்டிலே எப்படிப் போகமுடியும்? மழையும் பெய்கிறது'.' என்று கஞ்சன் சினந்துகொண்டான்.

''அப்படியானால் நாளைக்குப் பொங்கலை நிறுத்த வேண்டியதுதான்'' என்று மனைவி எச்சரிக்கை செய்தாள்.

''சரி வாங்கிவந்து விடுகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டான் கஞ்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளிலே சால்வையைப் போட்டான். செருப்புகளைக் கால்களிலே மாட்டினுன் குடையை விரித்துப் பிடித்துக்கொண்டு படிக்கட்டு வழியே இறங்கினுன். கடைத் தெருவை நோக்கி நடந்தான். ஐந்து நிமிடங்கள் வரை நடந்திருப்பான். நடந்தவன் திடீரென நின்ருன். முக்கியமான ஏதோ ஒன்றைச் செய்வதற்கு மறந்துவிட்டவன் போற் காணப்பட்டான்; திரும்பி வீட்டை நோக்கி நடந்தான். கொட்டு மழையையும் பொருட்படுத்தாமல் விரைந்து நடந்தான். வீட்டைச் சென்று சேர்ந்ததும் படிக்கட்டு வழியே ஏறி மேலே சென்ருன். வீட்டுக் கதவிலே பட பட என்று தட்டினுன். மனைவி கதவைத் திறந்தாள்.

''அவசரத்திலே படுக்கையறை விளக்கை அணைக்காமலே போய்விட்டேன். நாளுக்கு நாள் மறதி கூடிக்கொண்டே போகின்றது. விளக்குகள் வீணுக எரிந்து மாதம்மாதம் மின்சாரக் கட்டணம் கூடிக் கொண்டே போகின்றது. விளக்கை அணையாமற் சென்ற நினைவு பாதி வழியிலே வந்தது. விளக்கை அணைத்துவிட்டுப் போகவே திரும்பி வந்தேன்'' என்று கூறிக் கொண்டே கஞ்சன் வீட்டுக்குள்ளே போவதற்குக் காலை வைத்தான்.

''உங்கள் மறதியைப் பற்றி எனக்கல்லவா தெரியும். நீங்கள் வீட்டைவிட்டுப் படிக்கட்டிலே இறங்கும் போதே, படுக்கையறை விளக்கை அணைத்து விட்டே சமையல் வேலைகளைப் பார்க்கத் தொடங்கினேன்.'' என்று சாதிக்க முடியாததொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைச் சாதித்துவிட்டவள்போலக் கஞ்சனின் மனைவி பேசினாள். பின்னர் கணவனைப் பார்த்து,

"அதெல்லாம் சரி, நீங்கள் திரும்பி நடந்து வந்தமையாற் காலில் அணிந்திருந்த செருப்புகள் வீணாகத் தேய்ந்து போய் விட்டனவே" என்று கவலையோடு சொன்னாள்.

"நல்லது. உன்னைப்போல நீ என்னையும் நினைத்துக் கொண்டாய். அப்படி ஊதாரித்தனமாக நான் வாழ்ந்ததே கிடையாது. இங்கே பார்; செருப்புகள் தேய்ந்துவிடும் என்று அவற்றைக் கையிலேயே தூக்கிக் கொண்டு வந்துவிட்டேன். புதுச் செருப்புகளல்லவா?" என்று சொல்லிக் கையில் வைத்திருந்த செருப்புகளைக் கஞ்சன் காட்டினான்.

"பொங்கலுக்காம் பொருள்யாவும் வாங்கிவீடு
புகுந்தமனை கற்பூரம் மறந்தாளாகித்
தங்கணவன் தனைவாங்கி வாவென்றோதச்
சலிப்புடனே மாடியிற்பல் படிகள் தாண்டிப்
பொங்கொளியின் விளக்கணைக்க எண்ணிமீளப்
புதுச்செருப்புத் தேயாதோ எனச் சினந்தே
அங்கயற்கண் ணாள்வினவச் செருப்பைக் கையில்
அவனெடுத்து வந்தவிதம் காட்டி நின்றான்." *

* இச் செய்யுளை ஆக்கித் தந்த திரு. வ. சிவராசசிங்கம் அவர்களுக்கு எனது நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

நண்பர்களிடத்து அன்பு காட்டுதலிலும் பகைவர்களிடத்து அன்பு காட்டுதல் மேலானது நண்பர்களுக்குத் தீமை செய்யாதிருத்தலிலும் பகைவர்களுக்குத் தீமை செய்யாதிருத்தல் உயர்ந்தது. பகைவர்களிடத்து அன்புடையவர்களாக வாழ்வதும், பகைவர்களுக்குத் தீமை செய்யாதிருப்பதும் உயர்ந்த உள்ளம் படைத்த சான்றோர்க்கே ஒல்லும் நெறிகள்.

நன்மை செய்தார்க்கு நன்மை செய்வதிலும், தீமைசெய்தார்க்கு நன்மை செய்தல் மேலானது. நரிவெரூஉத் தலையார் என்னும் சங்கப் புலவர், "நல்வினையைச் செய்யமாட்டீராயினும் தீவினையைச் செய்யா தொழிமின்" என்று அறிவுரை வழங்குகின்றார்:

> "நல்லது செய்த லாற்றீ ராயினும்
> அல்லது செய்த லோம்புமின்..."

அதுவே எல்லோரும் உவப்பது; அதுவே எல்லோரையும் நல்ல நெறியின்கண் இட்டுச் செல்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வறிவுரையைப் பிற்காலத்தில் அவதரித்த சுவாமி விவேகானந்தர், இன்னொரு வகையாக எடுத்துரைத்தார். 'மற்றவர்களுக்கு நன்மை செய்யவே மனிதன் பிறந்தான்; எனவே, பிறருக்கு நன்மை செய்து வாழ வேண்டும். அவ்வாறு நன்மையைச் செய்து வாழவியலாதவிடத்துத் தீமையையாவது செய்யாதிருத்தல் வேண்டும்' என்பது அவரின் அறிவுரை:

"பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ
நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு."

முன்னையதும் பின்னையதும் ஒரே கருத்தையே வலியுறுத்துகின்றன. அவை வெவ்வேறு வடிவத்தில் வெவ்வேறு காலத்திலே தோன்றின.

அஞ்சுகின்ற கோழையொருவனுற் பகைவனிடத்திலே அன்புகாட்ட முடியுமா? முடியாது. அஞ்சாத வீரன் ஒருவனுலேயே பகைவனிடத்திலும் அன்பு செலுத்த முடியும். "அன்புக்குச் சோதனை பகைவனிடத்தன்றி நண்பனிடத்தன்று. ஒருவன் தன் நண்பனிடத்து அன்பு செலுத்துவது புதுமையானதன்று. பகைவனிடத்து அன்பு செலுத்தும்போது தான் அதற்குரிய உண்மையான சோதனை நடைபெறுகின்றது; அப்போதுதான் அது அறமாகின்றது; அதில் முயற்சியும் அமைந்துள்ளது; அதுதான் வீரச் செயல். அதுதான் உண்மையான ஆண்மை" என்பது காந்தியடிகளின் பொன்மொழி.

"இரண்டு பேர் தமக்குள் நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்பதும் தமக்குள் ஒருவருக்கொருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புகாட்டுவதும் நம்பிக்கையுமன்று; அன்புமன்று. திருடர்களிடத்திலும் இப்படியான நம்பிக்கையையும் அன்பையும் காண்கிறோம்'' என்று கூறிய அண்ணல் காந்தி, இவ்வகை இயல்பிலும் பார்க்கப் பகைவரிடத்து அன்புகாட்டி வாழ்தலே மேலானதென வலியுறுத்தினர்.

இவ்வறிவுரைகள் எல்லாவற்றிலும் பார்க்க வள்ளுவன் கூறிய அறிவுரைகள் மேலானவை; தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்றும், தீங்கு செய்தவரைத் தண்டிக்க வேண்டுமானல், அவர் வெட்கித் தலை குனியும்படி அவருக்கு நன்மை செய்துவிடல் வேண்டும் என்றும் வள்ளுவன் எடுத்துரைக்கின்றான்.

> இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
> லென்ன பயத்ததோ சால்பு.

> இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்.

வள்ளுவனுடைய இவ்வறிவுரைகளைக் காந்தியடிகள் வேறொரு வகையாக எடுத்துரைத்துள்ளார்; ''நன்மைக்குக் கைம்மாருக நன்மை செய்வது பெருந்தன்மைக்கு அடையாளமன்று; தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்வதே பெருந்தன்மை'' என்பது அவர் கூற்று.

இவற்றைச் சால்புடைய சான்றோர்களின் உயர்ந்த பண்புகளாக எடுத்துக்காட்டலாம். இச்சான்றோர், 'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்ற பரந்த இதயம் படைத்தோர்; ''யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்ற உயர்ந்த உள்ளம் உடையோர்; ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற சான்றாண்மை மிக்கோர்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.

இறைவனிடத்து அன்புடையராக வாழ்தல் ஒன்று. இறைவனுடைய அடியாரிடத்து அன்பு காட்டி வாழ்தல் இன்னொன்று. இவ்வகையினரைப் பெரியபுராணத்திற் காண்கின்றோம். இறைவனிடத்தும் இறைவனுடைய அடியாரிடத்தும் அன்பு காட்டுவதிற் புதுமையில்லை. ஆனால், சிவபத்தியே இல்லாத சிவவேடங்கொண்ட கொலைஞனை இறைவனுடைய உருவமாகவே கண்டு, வணங்கி வாழ்வதிலே புதுமையுண்டு. அப்படியான கொலைஞனுக்கு அன்பு காட்டும்போதுதான் உண்மையான இறை பத்தியின் உயர்ந்த நிலையினைக் காணமுடிகின்றது; அஃது உண்மையான பத்தியாக மிளிர்கின்றது; அதுவே உண்மையான இறையன்பும் ஆகும்.

இவற்றுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர் மெய்ப்பொருள் நாயனார். சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்குமிடையேயுள்ள சேதி நாட்டிலே திருக்கோவலூரிலே இவர் பிறந்து வளர்ந்தவர். நாட்டையாளும் மன்னராகவும் ஆலய வழிபாடு செய்யும் சிவபத்தராகவும் திகழ்ந்தவர். அறநெறியில் ஆட்சியை நடாத்திய அவர், வாள் வலியாலும் தோள் வலியாலும் சிறந்து விளங்கினார். இறைவனிடத்தும், இறைவனின் அடியார்களிடத்திலும் அவர் கொண்டிருந்த பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கு எல்லையேயில்லை. முறைப்படி ஆலய வழிபாடு செய்தவர்; ஐந்தெழுத்தை எந்த நாளும் ஓதியவர்.

மெய்ப்பொருள் நாயனாரின் ஆட்சியில், நாடு வளமடைந்தது; மக்கள் சீரும் சிறப்பும் உடையராய் வாழ்ந்தனர். அந்த வளம் மிகுந்த நாட்டை முத்திநாதன் என்ற மன்னன் கைப்பற்ற எண்ணினான். எனவே, மெய்ப்பொருள் நாயனாரோடு போர் தொடுத்தான். யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நாற் படைகளையும் கொண்டு பல முறை போரிட்டுப் படுதோல்வி கண்டான். போரிலே தோல்வி கண்ட முத்திநாதன் அவமானம் அடைந்தான்; ஆத்திரங் கொண்டான். "நேரிய முறையிற் போர் புரிந்தால் இந்த நாயனாரை வெல்லுதல் இயலாது!" என்று எண்ணினான்; வஞ்சனையாற் கொல்ல வழி தேடினான்.

மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களிடத்துப் பேரன்புடையவர். சிவ சின்னங்களைப் போற்றுபவர். அவற்றைத் தரித்த சிவனடியார் திருவடிகளைத் தினமும் பூசிப்பவர். பொன்னும் பொருளும் சிவபெருமானது அடியார்களுக்கே உரியவை யென்று எண்ணுபவர். அவற்றை அவர்களுக்கு வாரி வாரி வழங்கி அன்பு செய்து வாழ்பவர். இவற்றையெல்லாம் நன்கு அறிந்தவன் முத்திநாதன். எனவே, போர் தொடுப்பதை மறந்தான்; நாயனாரிடத்திலுள்ள அடியார் பத்தியைப் பயன்படுத்திக் கபடத்தினால் அவரை வெல்லத் துணிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திநாதன் தனது உடல் முழுவதும் விபூதியைப் பூசினான். சடைகளைச் சேர்த்துக் கட்டினான்; சிவனடியார் வேடந் தாங்கினான். கூரிய கத்தியைக் கவளிகை ஒன்றினுள் மறைத்து வைத்தான். அது புத்தகக் கவளிகைபோலத் தோன்றியது. அதனைத் தனது கையிலே தாங்கிக்கொண்டு, திருக்கோவலூரை நோக்கி நடந்தான். முத்திநாதன் பூண்ட இந்தப் பொய்த் தவவேடத்தை, சேக்கிழார் பெருமான் கற்பனைக் கண்களாலே கண்டு, சொற்களாலே ஓவியமாகத் தீட்டி நம் கண்முன்னே நிறுத்துகிறார்:

மெய்யெலாம் நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த
புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன
மனத்தினுட் கறுப்பு வைத்து
பொய்த்தவ வேடங் கொண்டு
புகுந்தனன் முத்தி நாதன்.

முத்திநாதனுடைய தவக்கோலம் 'மை பொதி விளக்குப்' போலச் சேக்கிழார் கண்களுக்குத் தோன்றியது உள்ளத்திலே வஞ்சம்; தோற்றத்திலே சிவனடியார். இத் தவக்கோலம் உள்ளே இருளையும் வெளியே ஒளியையுமுள்ள விளக்குப் போலச் சேக்கிழார் கற்பனைக் கண்களுக்குத் தோன்றியது.

முத்திநாதன் திருக்கோவலூருக்குச் சென்று, மெய்ப்பொருள் நாயனாருடைய மாளிகை வாயிலை அடைந்தான். தவக்கோலத்தோடு சென்ற அவனை, வாயில் காவலாளர் சிவனடியாரெனக் கருதி அஞ்சலி செய்து வணங்கினர். "சுவாமீ, உள்ளே எழுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருளுங்கள்'; என்று கூறி வரவேற்றனர். முத்திநாதன் உள்ளே சென்றான். மாளிகையின் வாயில்கள் ஒவ்வொன்றையும் கடந்து பள்ளியறைவாயிலை அடைந்தான். அப்போது, மெய்ப்பொருள் நாயனார் பள்ளியறையிற் படுத்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அரசமாதேவியார் அருகிலிருந்து கணவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தார்.

பள்ளியறையிலே நுழைய முனைந்த முத்திநாதனை, தத்தன் என்ற வாயில் காப்போன் கண்டனன். தத்தன் குறிப்புணர்வதில் வல்லவன். பொய் வேடங் கொண்டுவரும் புல்லனை, 'நல்லன் அல்லன்', என்று உணர்ந்தான். தடுத்து நிறுத்தத் துணிந்தான். ''அடியார்களைத் தடுத்து நிறுத்துவது தவறாகுமே! தடுத்து நிறுத்தாவிடத்தும் மன்னருக்குத் தீங்கு விளையக்கூடுமே'' என்று எண்ணினான்; இருதலைக் கொள்ளி எறும்புபோலத் தவித்தான். பின்னர் பணிவுடன்,

''சுவாமீ! மன்னர் பெருமான் உறங்குகின்றார். அவர் தங்களைத் தரிசிக்கவும், தாங்கள் அவருக்கு அருள் புரியவும் இது ஏற்ற சமயமன்று. '' சமயமறிந்து போதல் வேண்டும்'' என்று சாதுரியமாகக் கூறினான்.

''மன்னருக்கு யான் ஓர் உறுதிப்பொருள் கூறப் போகின்றேன்; தடை செய்யாதே'' என்று கூறிக்கொண்டே வஞ்சகன் உள்ளே நுழைந்தான். மன்னன் துயில் கொள்வதையும், பெருமாட்டியார் மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னனின் பக்கலில் இருப்பதையும் கண்டும், காணு தவன் போற் கட்டிலின் அருகணைந்தான். பெரு மாட்டியார் மன்னரை எழுப்ப, அவரும் விழித்தெ ழுந்தார். தம்முன்னே தவக்கோலத்தில் நின்ற அடி யாரைக் கண்டு, எழுந்து நின்று கைகூப்பித் தொழு தார். பின்னர்,

"சுவாமீ! தாங்கள் இங்கு எழுந்தருளுவதற் கான காரணம் யாது?" என்று கேட்டார்.

"உங்கள் இறைவன் ஆதிகாலத்திலே அருளிச் செய்த ஆகமங்களுள் ஒன்று என்னிடம் உண்டு. அஃது எங்கும் காணப்படாததொன்று. அதை உமக்குப் போதிப்பதற்காக இங்கு வந்தேன்." என் றான் முத்திநாதன்.

மன்னவனின் உள்ளத்திலே உவகை பொங்கி யது. மண்மேல் எங்குமில்லாத சைவாகமம் அல் லவா? அதனைக் கேட்டு உண்மைப்பொருளை அறி வதற்கு அவனுள்ளம் விழைந்ததில் வியப்பில்லையே! எனவே "இதைப் பார்க்கிலும் உயர்ந்த பேறு எனக்கு வேறுண்டோ? அந்தச் சைவாகமத்தை வாசித்து அடியேனுக்கு அதன் பொருளை அருளிச் செய்ய வேண்டும்" என்று வேண்டி நின்றான்.

"வேந்தர் வேந்தே! சிவாகமத்தைப் போதிக்க வேண்டுமாயின் மலர்மாலை சூடிய கூந்தலையுடைய அரசியார் இல்லாமல், நாமிருவரும் தனியே வேறி டத்திலிருத்தல் வேண்டும்," என்று முத்திநாதன் கூறினான். அவனின் வேண்டுகோளின்படி, மெய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் நாயனுர் தமது மனைவியாரை அந்தப் புரத்துக்கு அனுப்பி வைத்தார். சைவாகமத்தின் பொருளைக் கேட்பதற்கு ஆர்வங்கொண்டு, முத்தி நாதனை ஓர் ஆசனத்தில் அமரச்செய்தார்; தாம் கீழே அமர்ந்து, ''சுவாமீ! இனி ஆகமத்தை உப தேசியுங்கள்; அதன் உண்மைப் பொருளை அறிய என்னுள்ளம் விழைகின்றது'' என்றூர்.

நினைத்ததனை நிறைவேற்ற இதுவே ஏற்ற தரு ணம் என்று முத்திநாதன் துணிந்தான். தன் கையி லிருந்த வஞ்சக் கவளிகையை மடிமேல் வைத்தான். அந்தப் புத்தகக் கவளிகையை அவிழ்த்தான், அப் போது மெய்ப்பொருள் நாயனுர் சிரந்தாழ்த்தி வணங்கினுர். அதுவே, ஏற்ற தருணம் என் பதை முத்திநாதன் தெரிந்துகொண்டான். கவ ளிகையில் மறைத்துக் கொண்டுவந்த கத்தியை எடுத்து நாயனுரைக் குத்தினுன். அப்போது நாய ஞர், ''மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள்'' என்று சொல்லியவாறு அக்கொடியவனைக் கை கூப்பி வணங்கினுர். இந்த நிகழ்ச்சியை,

கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போதிப்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைத்தஅப் பரிசே செய்ய
''மெய்த்தவ வேட மேமெய்ப்
பொருள்'' எனத்தொழுது வென்றூர்.

என்று சேக்கிழார் வருணித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியாலே குத்திய கொலைஞனுக்குத் தீமை செய்ய நாயனார் நினைத்தாரா? இல்லை தவக் கோலங் கொண்ட சிவனடியார் தோற்றத்தில் அல்லவா அந்த நயவஞ்சகன் காட்சி கொடுத்தான். எனவே, இரத்த வெள்ளத்திலே கிடந்த நாயனார், அங்கே வந்த வாயில் காப்போனைப் பார்த்து, "தத்தனே, இவர் நம்மவர்; சிவனடியார்; இவருக்கு ஓரிடையூறுஞ் செய்யாதே" என்று கட்டளையிட்டார்.

உயிர் துறக்கப்போகும் நேரத்திலும் மெய்ப் பொருள் நாயனார் தமது குறிக்கோளை மறந்தாரல்லர். 'வஞ்சக வேடங்கொண்ட வஞ்சகன்னனைக் கொன்று நாட்டைக் காப்பாற்று' என்று பணித்தாரும் அல்லர். கொடியோனாக இருப்பினும், கொண்ட கோலத்துக்கு மதிப்பளித்துப் போற்ற வேண்டுமென்றே அவர் எண்ணினார். "இங்கே நிகழ்ந்தவற்றை ஊரார் அறிந்தால், இவரை உயிருடன் விட்டுவையார். இவ்வடியார்க்கு எவராலும் தீங்கு ஏற்படக் கூடாது. அவர் செல்லும் வழியிலும் தீங்கு நேராதவாறு காத்து, அவரை ஊருக்கு வெளியே விட்டுவா" என்று தன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த நிலையிலும் மன்னன் கட்டளையிட்டான்.

மெய்ப்பொருள் நாயனாரின் செயல் அடியார் பத்தியைக் காட்டுவதாக அமைந்து திகழ்கின்றது. அடியார் கோலங்கொண்ட ஒருவனை உண்மை அடியார் என்று எண்ணிக் காட்டிய பேரன்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருள் நாயனரின் உடலைவிட்டு உயிர் பிரியவில்லை. பொய்த் தவவேடங் கொண்ட முத்தி நாதன் எவ்வகை இடையூறுமின்றி, நாட்டை விட்டுக் காட்டைச் சென்றடையும்வரை, அவரின் உயிர் உடலைவிட்டுப் பிரியாது ஊசலாடிக் கொண்டிருந்தது. இன்னொரு வகையாகக் கூறின், முத்திநாதனை துன்பமின்றி நாட்டைக் கடந்த செய்தியை அறியும் விருப்பினுல் பிரிந்து செல்கின்ற உயிரையும் செல்லவிடாது தாங்கிக் கொண்டிருந்தார் மெய்ப் பொருள்நாயனர்

முத்திநாதனைக் கூட்டிக் கொண்டு தத்தன் நாட்டைக் கடந்து சென்றான்; ஆட்கள் அணுக முடியாத காட்டு வழியிலே அவனை வழியனுப்பினுன்; 'கடமையைச் செய்து முடித்தேன்' என்ற உவகையோடு அரண்மனைக்குத் திரும்பினுன்; உயிரைத் தாங்கிக் கொண்டு, தன்னை எதிர்பார்த்திருந்த மன்னனைக் கண்டான். ''சுவாமி! சிவபத்தரை இடையூறு எதுவும் வராதபடி காப்பாற்றி வழியனுப்பி வைத்தேன்'' என்று சொன்னுன்.

தத்தன் கூறியவைவயைக் கேட்டு மெய்ப்பொருள் நாயனரின் அகங் குளிர்ந்தது; முகம் மலர்ந்தது. உயிர் ஊசலாடும் நிலையில், அவர் உள்ளம் எதனையோ எடுத்துச் சொல்ல விழைந்தது. உள்ளத்தில் எழுந்தவை அவர் உதடுகளிலே மெல்ல மெல்ல வெளிவந்தன. ''இன்று நீ எனக்குச் செய்த உதவியை வேறு யார் செய்ய வல்லார்'' என்ற சொற்கள் உதடுகளிலே வெளிவரத் தத்தனை அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த கண்களால் நோக்கினார் நாயனார். அப்போது அவரின் உடலிலிருந்து உயிர் பிரிந்தது.

விவேகாநந்தர் பிறருக்கு நன்மை செய், என்று அறிவுரை கூறுவதற்கு மேலாக, 'பிறருக்குத் தீமை யாவது செய்யாதிரு' என்று அறமுரைத்தார். யேசுநாதர், 'எல்லாரையும் நேசி' என்று கூறுவதைக் கடந்து, 'பகைவரையும் நேசி' என்றார். திருவள்ளுவர், 'எல்லார்க்கும் இனியவை செய்' என்று விளக்குவதை விடுத்து, 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்' என்றும், 'இன்னா செய்தாரை ஒறுக்க அவர் நாண நன்னயஞ் செய்' என்றும் விளக்கினார்.

தவக்கோலங் கொண்ட கொலைஞன் என்று தெரிந்த பின்னும், முத்திநாதனுக்கு இனியவே செய்ய மெய்ப்பொருள் நாயனார் எண்ணினார். கத்தியாலே தமது உயிரைவாங்கிய அவனைச் சினந்து பார்த்தாரா? வெறுத்துப் பேசினாரா? இல்லை. சிவனடியார் வேடந் தாங்கிய கொலைஞனைச் சிவனடியாராகவே கண்டார். ''மெய்த்தவ வேடமே மெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்.''

இன்னும் கொலைஞன் எவ்வகை ஊறுமின்றி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் அவர் உள்ளம் விழைந்தது. வெளியேற வேண்டும் என்று எண்ணியதோடன்றி, அவன் அவ்வாறே வெளியேறி விட்டான் என்பதைத் தத்தனிடம் அறிந்து கொள்வதற்காக அவன் திரும்பி வரும் வரை உயிரை உடலிலே தாங்கி நின்றார். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்தியை அறிந்த பின்னரே அவர் உயிர் துறந்தார்.

## ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்''

முத்திநாதன் சிவவேடம் பூண்டுவராது சொந்தக் கோலத்திலே வந்து, உடைவாளை உருவி மெய்ப்பொருளைக் கொல்ல முயன்றிருந்தால் மெய்ப்பொருள் யாது செய்திருப்பார்? சத்திரிய வீரரான மெய்ப்பொருள், சத்திரிய தருமப்படி அவனைக் கொன்று வீழ்த்தியிருக்கமாட்டாரா? முத்திநாதன் முன்னம் மெய்ப்பொருளோடு போர் மலைந்த காலத்தில் அந்த இன்னு செய்த முத்திநாதனுக்கு நன்னயஞ் செய்து தண்டித்தாரா? இல்லை. 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்ற கொள்கையுடையார். என்பதனாலேயே முத்திநாதனுக்குத் தீமை செய்யாது நன்மை செய்தார்; 'மெய்ப்பொருள்' என்ற பெயரையும் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. வஞ்சிக் காண்டம் வேண்டுமா ?

இலண்டன் பல்கலைக் கழகத்திலே கலாநிதிப் பட்டத்துக்காக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தேன். கலாநிதி யோன் மார் எனது ஆராய்ச்சிக்கு மேற்பார்வையாளராக இருந்தார். அவர் ஆங்கிலேயர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழைக் கற்றவர். சங்க இலக்கியங்களிலே ஆழ்ந்த ஈடுபாடுடையவர். எட்டுத்தொகை பற்றி ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் பெற்றவர். ஆங்கிலேயர் ஒருவர் தமிழைக் கற்று சங்க இலக்கியத்திலே ஆராய்ச்சி செய்து, கலாநிதிப் பட்டம் பெற்றமை பெரிதும் பாராட்டத் தக்கதல்லவா?

கலாநிதி யோன் மார் இனிய பண்பாளர். தமிழ்ப் பண்பாட்டைப் பெரிதும் போற்றுபவர். ஒரு மகளுக்குச் சரஸ்வதி என்று பெயரிட்டுள்ளார். மற்றப் புதல்விக்கு நிலா என்று பெயரிட்டுள்ளார். தமிழ் மொழியிலும், தமிழ்ப் பண்பாட்டிலும், இந்துக் கலாசாரத்திலும் அவருக்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாட்டையே இவை இனிது எடுத்துக் காட்டு கின்றன.

தமிழகத்திலே தமிழ் இலக்கியங்களைப் படித்துக்கொண்டிருந்தபோது, யோன் மார் கருநாடக இசையையும் கற்றார்; இராகம், தாளம், பல்லவி ஆகியவற்றை அழுத்தந் திருத்தமாகப் பாடக் கூடிய அளவிற்குக் கருநாடக இசையை முறையாகப் படித்தார். இன்னொரு வகையாகக் கூறின், மேடையேறிக் கச்சேரி செய்யுமளவிற்குக் கருநாடக இசையைக் கற்றவர். இப்போதும் பாடிப் பாடி பயிற்சி செய்பவர். தமிழகத்திலும் இலங்கையிலும் இசைக் கச்சேரிகள் செய்து, பல சங்கீத வித்துவான்களின் பாராட்டுதல்களையும் பெற்றவர். யாழ்ப்பாணத்திலே நடந்த நாலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் அவருடைய இசைக் கச்சேரி இடம்பெற்றது. இவ்வாறு தமிழறிஞரும் இசை வல்லுநருமான ஓர் ஆங்கிலேயரின் கீழ், 'தமிழிலுள்ள பத்தி இலக்கியங்கள்' பற்றிய ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்புப் பலருக்குக் கிடைக்காததொன்று.

1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலண்டன் பல்கலைக்கழகத்திலே சேர்ந்தேன். முற்றிலும் புதிய சூழல்; முரண்பட்ட காலநிலை; பல்வேறு நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் — இச் சூழலிலே கல்வியை மேற்கொண்டேன். ஆராய்ச்சிக்கான காலப்பகுதியில் இரண்டு கல்வியாண்டுகள் ஓடி மறைந்தன. தே[illegible] வந்தது. பல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலைக்கழகத்திலே தம்மைச் சந்திக்குமாறு யோன் மார் அவர்களிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அவரைக் காண்பதற்காக அங்கே சென்றேன்; குறிப்பிட்ட நேரத்திலேயே அவரைச் சந்தித்தேன்.

''கல்வியைத் தொடர்ந்து கொண்டே தமிழ்த் துறையில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்ற முடியுமா?'' என்று யோன் மார் என்னைக் கேட்டார்.

''எனது பல்கலைக்கழகம் அனுமதி கொடுக்க வேண்டுமே! பட்டமேற் படிப்புக்கு வந்த யான் ஆராய்ச்சி உதவியாளர் பதவியை ஏற்பது பல்கலைக்கழக நடைமுறைக்கு ஒவ்வாதது'' என்று பதிலளித்தேன்.

''அனுமதியைப் பெற்றுக் கொடுப்பது எனது பொறுப்பு. இலண்டன் பல்கலைக்கழகத்தின் மூல மாகவே, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அனும தியைப் பெற்றுக்கொள்ளலாம்'' என்று அவர் கூறினர்.

1972 ஆம் ஆண்டு ஒற்ருேபர் மாதத்திலிருந்து ஆராய்ச்சி உதவியாளனுகப் பணியாற்ற இலங் கைப் பல்கலைக்கழகம் எனக்கு அனுமதி அளித்தது.

தமிழ்த் துறையோடு தொடர்புடைய ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவிசெய்தல், பட்டதாரி வகுப் புகளிலே தமிழை ஒரு பாடமாகக் கற்றவர்களுக்கு விரிவுரைகள் நடாத்துதல் என்பன எனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளாகும். இவற்ருேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆராய்ச்சியையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதனுற் சிறிது கடினமாகவே உழைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

எனினும், ஆராய்ச்சி உதவியாளர் என்பதனுல் மற்றைய ஆராய்ச்சி மாணவர்களுக்கில்லாத வாய்ப்புகள் சில எனக்குக் கிடைத்தன. தனிப்பட்ட ஓர் அறை கொடுக்கப்பட்டது. அந்த அறையிலே தொலைபேசி ஒன்றும் இருந்தது. ஆராய்ச்சி உதவியாளருக்கான வேதனமும் கிடைத்தது. ஆகவே, விரிவுரைகளை ஒழுங்காக நடாத்த முடிந்தது; அமைதியாக ஆராய்ச்சியையும் தொடர்ந்து செய்ய வாய்ப்பு ஏற்பட்டது.

முதலாம் ஆண்டுப் பட்ட வகுப்பில் மூவர் தமிழ் கற்றனர். ஒருவர் இசிரேல் நாட்டைச் சேர்ந்தவர். இசிரேல் பல்கலைக்கழக விரிவுரையாளர். புலமைப் பரிசில் பெற்று இலண்டன் பல்கலைக் கழகத்திலே படித்துக் கொண்டிருந்தார். இன்னெருவர், இலண்டன் மாநகரத்தைச் சேர்ந்தவர். தென்னிந்திய வரலாற்றை ஒரு பாடமாகக் கற்ருர். அதனுலே தமிழை ஒரு பாடமாகக் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. மூன்ருமவர் தென்மார்க்கு நாட்டைச் சேர்ந்தவ்ர். தமிழகத்திலும் இலங்கையிலும் சுற்றுலாச் செய்தபின்னர், தமிழைக் கற்கவேண்டும் என்ற ஆர்வத்தாலே பல்கலைக்கழகத்திலே சேர்ந்தார்.

'தமிழைக் கற்கவேண்டும்; அதுவும் விரைவாகக் கற்கவேண்டும்' என்பதே அவர்களின் குறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள். தமிழ் இலக்கியங்கள், தமிழ் நாட்டுக் கதைகள் பழக்கவழக்கங்கள் முதலியனவற்றை அறிவதில் அவர்களுக்கிருந்த ஆர்வத்துக்கு அளவேயில்லை. தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழ் மக்களோடு சேர்ந்து வாழ விரும்பினர். ஊரூராய்ச் சென்று தமிழ் நாட்டுக் கதைகளைக் கேட்டறிய விழைந்தனர்; தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டனர்; கொண்டாட்டங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பனவற்றைக் கண்டு களிக்க விரும்பினர்.

▭ ▭ ▭

முதலாம் ஆண்டுப் பட்ட வகுப்பு மாணவர் சிலப்பதிகாரத்தைப் படிக்க வேண்டும்; ஆழமாகவன்று. சில முக்கியமான விடயங்களைத் தெரிந்திருத்தல் வேண்டும். காப்பியம் தோன்றிய காலம், கதைப் போக்கு, நுட்பங்கள் என்பனவே முக்கியமானவை. இவற்றைக் கற்பிக்கும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது.

இரண்டாம் பருவம் தொடங்கியது. முதல் விரிவுரையில், காப்பியம் தோன்றிய காலத்தை விளக்கினேன். நூலெழுந்த வரலாறு இரண்டாம் விரிவுரையில் முக்கிய இடம் பெற்றது. மூன்றும் விரிவுரையிலே புகார்க் காண்டத்திலிருந்து கதையைத் தொடங்கினேன்.

" கண்ணகியின் சிறப்பையும் கோவலனின் பெருமையையும் இளங்கோவடிகள் விளக்கும் அழகினை விரித்துரைத்தேன். ஒரு பெருங் குரவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலனையும் கண்ணகியையும் மணக்கோலத்திற் காண விரும்பினர். திருமண நாளும் வந்தது. முரசுகள் இயம்பின; மத்தளங்கள் அதிர்ந்தன. கண்ணகியுடன் கோவலன் தீயினை வலம் வந்தான்.

"காதலற் பிரியாமல், கவவுக் கை ஞெகிழாமல்
தீதறுகென!"

என்று மணமகளை மங்கையர் மலர் கொண்டு வாழ்த்தினர். திருமணம் முடிந்தது. கோவலனும் கண்ணகியும் தம்முட் கூடி இல்லறம் நடாத்தினர்.

கலை சிறந்த மரபிலே பிறந்தவள் மாதவி; நாடக மகளிர்க்கு உரியனவாகச் சொல்லப்பட்ட 'ஆடலும் பாடலும் அழகும்' உடையவள். ஏழாண்டுகள் ஆடற் கலையைக் கற்றவள். அரசன் முன்னிலையில் அவளின் அரங்கேற்றம் நடந்தது. மாதவியின் அழகிலும் ஆடலிலும் மயங்கினான் கோவலன்.

"விடுதலறியா விருப்பின னாயினன்
வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்து"

மாதவியைப் பிரியமுடியாத பெருவிருப்புடன் கோவலன் அவளுடன் கூடி வாழ்ந்தான்; கண்ணகியை மறந்தான்.

கண்ணகி, கணவனைப் பிரிந்து தனித்துப் புலம்பி வருந்தினாள்; கோவலன் மாதவியுடன் ஊடியும் கூடியும் மகிழ்ந்தான். கடலாடக் கடற்கரைக்கு மாதவியுடன் சென்றான். கற்பாறை ஒன்றின்மேல் இருவரும் அமர்ந்திருந்தனர். யாழிலே கானல்வரியைக் கோவலன் மீட்டான். யாழை வாங்கி மாதவியும் மீட்டினாள். மாதவி மீட்டிய கானல் வரியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக் கோவலன் மனம் மாறினான்; ''மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்'' என்று எண்ணினான். திடீரென எழுந்தான்; மாதவியைப் பார்க்கவும் விரும்பாமல் விரைந்து நடந்தான்; கண்ணகியிடம் வந்து சேர்ந்தான்.

,'சலம் புணர் கொள்கைச் சலதியொடாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு''

என்று ஆடற் கணிகை ஒருத்தியுடன் சேர்ந்து அரிய செல்வம் அனைத்தையும் இழந்ததை எடுத்துச் சொல்லி வருந்தினான்.

''நலகேழ் முறுவல் நகைமுகங் காட்டி
சிலம்புள கொண்மென........''

என்று கூறி எஞ்சியிருந்த இரண்டு சிலம்புகளையும் கோவலனிடம் கண்ணகி கொடுத்தாள். அவற்றை விற்று, இழந்த பொருள்களை மீட்கக் கோவலன் எண்ணினான். கண்ணகியையும் அழைத்துக் கொண்டு பாண்டியர் தலைநகரான மதுரைக்குச் சென்றான்.

▭ ▭ ▭

மூன்றும் பருவம் தொடங்கியது. மதுரைக் காண்ட நிகழ்ச்சிகளை விளக்கத் தொடங்கினேன்.

கவுந்தியடிகளின் துணையோடு கோவலனும் கண்ணகியும் காட்டைக் கடந்தனர். தெப்பத்தின் உதவியால் வையை நதியைக் கடந்து மதுரைப் புறஞ்சேரியைச் சென்று சேர்ந்தனர். பாண்டியனின் பெரிய கோட்டையின்மீது கட்டப்பட்டிருந்த கொடிகள் அசைந்து ஆடின. 'கோவலனையும் கண்ணகியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைக்கு வரவேண்டாம்' என்று குறிப்பிடுவன போல அவை அசைந்தாடின.

''போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரலென்பது போல் மறித்துக் கைகாட்ட''

கொடி என்ற கைகளை அசைத்துக் காட்டிக் கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்குள் வராது தடுத்தவர் யார்? காப்பியத்தைச் செய்த இளங்கோ வடிகளே!

புறஞ்சிறை மூதூரிலே கவுந்தியடிகளையும் கண்ணகியையும் தங்க வைத்துக் கோவலன் மதுரை மாநகரினுட் சென்றான்; வீதிகள் தோறும் சென்றான். அங்காடி வீதிகளைக் கண்டான்; இரத்தினக் கடைத் தெருக்களைப் பார்த்தான்; இலங்கு கொடி எடுக்கும் நலங்கிளர் வீதியையும், 'கூலம் குவித்த கூல வீதியையும்' கண்டு களித்து மீண்டான். மதுரையிலே தான் கண்டனவற்றையெல்லாம் கவுந்தியடிகளிடம் கூறினான். அவ்வழியாக வந்த மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாக அளித்தார் கவுந்தியடிகள். கோவலனும் கண்ணகியும் மாதரியின் வீட்டைச் சென்று சேர்ந்தனர்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் புதுமனை ஒன்றை மாதரி கொடுத்தாள்; பல்வகைப் பொருள்களையும் வழங்கினாள். தன் மகளையும் கண்ணகிக்குத் துணையாக இருக்கச் செய்தாள். கண்ணகி கணவனுக்கு உணவு சமைத்தாள். வாழையின் குருத்தை விரித்து அதன்கண் உணவைப் படைத்தாள். ''அமுதம் உண்க அடிகள்'' என்றாள். உண்டபின் இருவரும் பேசி மகிழ்ந்தனர். அப்போது கோவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தவற்றை நினைந்து வருந்தினன். "இரு முது குரவரும் அவ்வப்போது என்னைத் திருத்துவதற்காகக் கூறியவற்றைச் செய்யத் தவறினேன்; மாதவிக்கும் சிறுமைகளையே செய்தேன். உடன் வருக வென உன்னை அழைப்பது தவறு என்பதை எண்ணிப் பார்க்கவும் மறந்தேன். புறப்படு என்றேன்; உடனே நீயும் எழுந்து என்னுடன் வந்துவிட்டாய்" என்று பலவாறு கூறி நெஞ்சம் நொந்தான்:

"இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்:
வழுவெனும் பாரேன்; மாநகர் மருங்கு ஈண்டு
எழுகென எழுந்தாய் என் செய்தனை!"

என்று கோவலன் நொந்து சொன்னவற்றை இளங்கோவடிகள் சோகச் சுவையுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

சிலம்புகளில் ஒன்றைக் கையிலே தாங்கி மதுரை மாநகருக்குள்ளே கோவலன் சென்றான்; வணிகர் வீதிவழியே சென்று கொண்டிருந்தான். வீதியிலே பொற்கொல்லன் ஒருவன் எதிர்ப்பட்டான். அவனிடம் தன் சிலம்பினைக் காட்டித் தன் கருத்தைக் கூறினன். பொற்கொல்லன் கோவலனிடம் சிலம்பை வாங்கிப் பார்த்தான். அப்போது, முன்னர் தான் களவாடிய அரசியின் காற்சிலம்பு அவன் நினைவுக்கு வந்தது; சதி செய்து தன்னைக் காப்பாற்ற ஏற்ற தருணம் இதுவே என்று எண்ணினன்.

"கோப்பெருந்தேவியரன்றி இவ்வூரில் வேறு எவரும் இதனை வாங்கி அணியும் தகுதியிலர். இங்கே இருப்பீராக; யான் சென்று உசாவி வருகிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிப் பொற்கொல்லன் அரண்மனைக்குச் சென்றான். பாண்டியனைக் கண்டு:

''நுட்பமான வேலைப்பாடுகளுடைய நம் அரசியின் சிலம்பு, ஓர் அயலான் கையிலிருக்கக் கண்டேன்'' என்று கூறினான். அரசன் காவலாளரை அழைத்து, ''இதோ இவன் காட்டும் கள்வனிடத்திலே பூங்கோதையாளின் காற்சிலம்பு இருக்குமாயின், அவனைக் கொன்று, அச்சிலம்பினைக் கொண்டு வருக'' என்று கட்டளையிட்டான்; கோவலனைக் கொன்று, காற்சிலம்பை மன்னனிடம் சேர்ப்பித்தனர் காவலர்.

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி கேள்விப்பட்டாள்; அதுவும் 'கள்வன்' என்று பழி சுமத்திக் கொலைசெய்யப்பட்டதாக அறிந்தாள். கண்ணீர் பெருக்கிக் கதறி அழுதாள். கதிரவனைப் பார்த்து, ''காய்கதிர்ச் செல்வனே! என் கணவன் கள்வனா?'' என்று கேட்டாள். அப்போது வானத்தில் ஒரு குரல் கேட்டது:

''கள்வனோ அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூர்''

கதிரவன் கூறிய இவை கண்ணகியின் உள்ளத்திலே அமைதியை ஏற்படுத்தினவா? இல்லை. குலைந்த கூந்தல்; தூசி படிந்த மேனி; கண்களிலே கண்ணீர்; கையிலே சிலம்பு — இத் தோற்றத்துடன் பாண்டியனைக் கண்டு முறை கேட்கப் புறப்பட்டாள்.

மதுரை வீதியிலே விரைந்து நடந்தாள். அரண்மனை வாயிலைச் சென்றடைந்தாள். ''வாயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோயே! வாயிலோயே!'' என்று விளித்தாள். ''நல்லறமற்ற நெஞ்சத்தன்'', ''செங்கோல் தவறிய கொடியன்'' என்று மன்னன்மேற் பழி சுமத்தினுள். பின்னர், ''சிலம்பு ஒன்றைக் கையிலே ஏந்தியவள்; கணவனை இழந்தவள்; கடைவாயிலின் கண்ணே உள்ளாள்!'' என்று அரசனுக்கு அறிவிக்குமாறு வாயிற் காவலனுக்குக் கூறினுள்.

மன்னன் முன்னே வாயில் காவலன் வந்தான்; மன்னனை வாழ்த்தி, ''வேந்தே! சிலம்பு ஒன்றைக் கையிலே ஏந்தியவள்; கணவனை இழந்தவளாம்; கடைவாயிலின்கண்ணே நிற்கின்றுள்'' என்று கூறினுன் அதற்கு, ''அவளை இவ்விடம் அழைத்து வா'' என்று மன்னவன் கட்டளையிட்டான். கண்ணகி, மன்னவன் முன்னே வந்து நின்றுள்.

''நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்!
யாரையோ நீ?''

என்று பாண்டியன் கேட்டான்,

பிறந்த நாட்டின் பெருமையைப் போற்றிப் பேசினுள்; அந்த நாட்டு மன்னர்களின் செங்கோலாட்சியைப் பாராட்டினுள்; பிறந்த குடியையும், புகுந்த குடியையும் புகழ்ந்து கூறினுள். பின்னர், ''மன்னவனே! சிலம்பை விற்றுச் சீரழிந்த வாழ்வைச் சிறப்புச் செய்ய எண்ணினேம். ஊழ்வினை பிடித்துத் தள்ளியது; உன்னுடைய நாட்டுக்கு வந்து சேர்ந்தோம். வாழவேண்டி வந்தோம்: ஆனுல், சிலம்பு திருடிய கள்வன் என்று என் கணவன் கொலை செய்யப்பட்டான். கொலை செய்யப்பட்ட கோவலனின் மனைவி யான் ; என் பெயர் கண்ணகி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள். ''பெண்ணணங்கே! ''கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோன்மை அன்று. முறை தவறாத அரசநீதி அதுவே'' என்று பாண்டியன் சொல்லி முடிக்கு முன்பாகவே,

'' நல்ல முறையிலே நியாயத்தைத் தெளிந்து செயலாற்றாத கொற்கை வேந்தே! என் காற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாக உடையது '' என்று கூறி, வாதிடத் தொடங்கினாள் கண்ணகி.

''நன்கு சொன்னாய். எமது சிலம்பு முத்துக்களை உள்ளிடு பரல்களாக உடையது '' என்றான் பாண்டியன்.

கண்ணகியிடமிருந்து சிலம்பைப் பாண்டியன் பெற்றான்; அந்த அழகிய காற்சிலம்பை எறிந்து உடைத்தான். மாணிக்கப் பரல்கள் பறந்தன. மாணிக்க மணிகளைக் கண்டு மன்னன் பதறினான். செங்கோல் ஆட்சி போயிற்றே என்று ஏங்கினான், ''யான் அரசனா? இல்லை. யானே கள்வன்'' என்று கதறினான். 'ஆயுள் கெடுக' என்று கூறிக் கீழே வீழ்ந்து இறந்தான். அரசியும் உளங்குலைந்து நடுங்கிக் கீழே வீழ்ந்து உயிர் துறந்தாள்.

கண்ணகியின் சினம் தணிந்திலது. தனது இடது முலையினைத் திருகி எறிந்தாள். தீக்கடவுளை ஏவினாள். பாண்டியன் கூடலிற் பேரழல் எரிந்தது; நாலாபக்கமும் தீப்பற்றிப் பரவியது; மதுரைமாநகரம் எரிந்து சாம்பரானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் கொலையுண்டான். பாண்டிய மன்னன் அரச கட்டிலிருந்து வீழ்ந்து உயிர் துறந்தான். அவனுடன் கோப்பெருந்தேவியும் மாய்ந்தாள். மதுரை எரிந்து சாம்பரானது. குலைந்த கூந்தல்; அக்கினியைக் கக்கும் கண்கள்; தூசி படிந்த மேனி; கண்டோர் கலங்குந் தோற்றம்—இந்தக் கோலத்திலே ஒரு முலை இழந்த தருமபத்தினி நின்றாள்.

▭ ▭ ▭

"மதுரைக் காண்டம் முடிந்தது" என்று கூறி மாணவர்களைப் பார்த்தேன். அவர்கள் பல கருத்துகளை வெளியிட்டனர்.

"காப்பியத்தை அழகாக முடித்துள்ளார் இளங்கோவடிகள்" என்றார் தென்மார்க்கு நாட்டார்,

"இதைவிடச் சிறந்த முடிவை எங்கும் காண முடியாது" என்று கூறி அகத்திலெழுந்த மகிழ்ச்சியை முகத்திற் காட்டினார் இலண்டன் மாநகரத்தார்.

"துன்பியல் நாடகத்துக்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டு" என்றார் இசிரேல் நாட்டார்.

அவர்களின் முகத்திலெழுந்த இன்ப உணர்வுகளைச் சொற்களால் எங்ஙனம் எடுத்துரைப்பது?

தமிழ் நாட்டு மாணவர்களைப் பொறுத்த வரையில் அவர்களின் மனநிலை முற்றிலும் வேறுபட்டது. மதுரைக் காண்டம் முடியும் போது, கோவலனின் கொலைக்காக இரங்குவர்; கண்ணகியின் நிலைக்காகக் கலங்குவர். இன்னும் பாண்டியனின் பரிதாபநிலை துன்ப உணர்வை உண்டாக்கும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிமாதேவியின் முடிவு கண்களைக் கலங்க வைக்கும்; எரிந்த மதுரை அச்ச உணர்வை ஏற்படுத்தும்.

"வஞ்சிக்காண்டத்தைத் தொடங்கலாமா?" என்று கேட்டேன். இப்படியான வினவொன்றை என்னிடமிருந்து அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. காப்பியம் முடிந்து விட்டது என்று எண்ணியவர்களுக்கு எனது வினா வியப்பையே அளித்தது. என்னைப் பார்த்து, "சிலப்பதிகாரக் கதை இன்னும் முடியவில்லையா?" என்று கேட்டனர்.

"இல்லை. இன்னும் காப்பியம் முடியவில்லை. கண்ணகி தன் கணவனைக் கண்டு வானுலகஞ் சென்ற கதை இருக்கிறது. செங்குட்டுவன் வடநாடு சென்று ஆரிய மன்னரை வென்ற வரலாறு இருக்கிறது. அங்கிருந்து கல் கொண்டுவந்து கண்ணகிக்குச் சிலையெடுத்த விழாவும் வருகின்றது. இவை யாவும் வஞ்சிக்காண்டத்தில் வருபவை" என்றேன். அப்போது அவர்களின் முகத்திலிருந்த மகிழ்ச்சி மறைந்தது. உள்ளத்திலே எழுந்த கருத்தை மறைக்காமலே,

"வஞ்சிக்காண்டம் வேண்டுமா?"
என்று என்னிடம் கேட்டனர்

"உங்களைப் பொறுத்த அளவில் வஞ்சிக்காண்டம் வேண்டியதில்லை, ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் அது வேண்டியதே" என்று பதில் கொடுத்தேன், ஏன் ? என்று வினவினர். என் பதில் பின்வருமாறு அமைந்தது:

"நீங்கள் துன்பமான முடிவிலும் இன்பத்தைக் காண்கின்றீர்கள். ஆனால், தமிழ்மக்கள் துன்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான முடிவுகளையும் இன்பமாக முடிக்கவே விளைகின்றனர். வாழ்க்கைப் பாதையில் அவர்கள் துன்பத்திலே துன்பத்தையே காண்கின்றனர். துன்பத்தில் இன்பத்தைக் கண்டு அவர்கள் மகிழ்வதில்லை. இதனால், துன்பியல் நாடகங்களுக்குத் தமிழ்நாட்டில் அதிக வரவேற்பு இருப்பதில்லை; துன்பியல் திரைப் படங்களை அவர்கள் விரும்பிப் பார்ப்பதுமில்லை; துன்பியல் நாவல்களை ஆர்வத்தோடு படிப்பதுமில்லை. மேனாட்டிலோ அப்படியன்று. இன்பமான முடிவுகளுக்கு எவ்வளவு வரவேற்பு உண்டோ, அவ்வளவு வரவேற்புத் துன்பமான முடிவுகளுக்கும் உண்டு. அது திரைப்படமாக இருக்கலாம். நாடகமாக இருக்கலாம்; அல்லது, நாவலாக இருக்கலாம். இதுவே, தமிழ் நாட்டுக்கும் மேனாட்டுக்குமுள்ள வேறுபாடு.

திரைப் படங்கள் திருமணத்துடன் முடிவடையும். நாடகங்கள் மங்கலமான முடிவோடு மேடை ஏறும். நாவல்கள் இன்பமான முடிவுகளைக் கொண்டிருக்கும். இவற்றையே தமிழ்நாட்டில் அதிகமாகக் காணலாம். இவற்றையே தமிழ் மக்களும் பெரிதும் விரும்புகின்றனர்.

இன்னும், வஞ்சிக்காண்டம் வரலாற்று உண்மைகளைக் கொண்டது. செங்குட்டுவன் வடநாட்டு மன்னரை வென்றதும், கண்ணகிக்குச் சிலைஎடுத்ததும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆகவே, வஞ்சிக்காண்டம் வேண்டும்.'' என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. காணூர் எனச் செய்யார் மாணூவினை

'திருவள்ளுவர் தமிழ் நாட்டிலே தோன்றித் திருக்குறள் என்ற நூலை யாத்தார், எனினும், திருக்குறள் தமிழ் நாட்டுக்கு மட்டும் உரியதன்று; அஃது உலகத்தவர்க்கே உரியது; உலகப் பொது நூலாகத் திகழ்கின்றது. ஆகவே, திருவள்ளுவரைத் தமிழ் நாட்டளவிற் கட்டுப்படுத்தலாகாது; அது தளையாகும்; சிறையாகும்' என்று திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஆம். உலகிற்கு என உயர்ந்த நூலொன்றைச் செய்த ஒருவரைத் தமிழ்நாட்டிற் சிறையிடுதல் அறியாமையாகும்; பரந்த பண்புமாகாது.

எனினும், வள்ளுவர் தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் மக்களோடு வாழ்ந்தவர்; தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களை நன்கு தெரிந்தவர்; தமிழ்ப் பண்பாட்டினை நன்கு அறிந்தவர். தமிழ் நாட்டு ஆட்சி முறைகளையும் தமிழ் மன்னர்களின் உயர்ந்த அரசியற் கொள்கைகளையும் நன்கு தெரிந்தவர். 'தமிழ்', 'தமிழன்', 'தமிழ் நாடு', 'முடியுடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவேந்தர்' என்றெல்லாம் தமது திருக்குறளிலே வள்ளுவர் எடுத்தாளவில்லை என்பது உண்மையே. ஆனால், உலகப் பொது நூலாகத் திருக்குறளைச் செய்வதற்குத் தமிழ் நாடும், தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் வள்ளுவருக்குப் பின்னணி களாக அமைந்தன என்பதை எவராலும் மறைக் கவோ, மறுக்கவோ முடியாது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பால்களைக் கொண்டது திருக்குறள். அற மும் பொருளும் காதலும் உலக மக்களுக்கே பொது வானவை. இவற்றுட் பொருட்பாலை நோக்குவோம். பொருட்பாலில் அரசியற் கருத்துகளை வள்ளுவன் வரையறை செய்கின்றான். அவன் கூறுகின்ற அர சியற் கருத்துகள் இக்காலத்துக்கும் பொருந்துவன; எதிர் காலத்துக்கும் ஏற்புடையன. தமிழ் நாட்டு ஆட்சியாளர்களும் பின்பற்ற வேண்டியன; உலக நாடுகளிலுள்ள ஆட்சியாளர்களும் கடைப்பிடிக்க வேண்டியன. இன்னொரு வகையாகக் கூறின், தமிழ் நாட்டு அரசியல் முறையை அடிப்படையாக வைத்தே, உலகம் முழுவதற்கும் ஏற்புடைய அர சியற் கருத்துகளை வள்ளுவன் ஆக்கிக் கொடுத் தான என்று கூறின் அது மிகையாகாது.

பொருட்பாலில் உயிர்த் துடிப்பாய் ஒளிர்வது செங்கோன்மை. இது தமிழ்நாட்டு ஆட்சி முறையி னின்றும் முகிழ்த்தது; தமிழ் நாட்டு மன்னர்களின் ஆட்சியையே அடிப்படையாகக் கொண்டது. அரசன் தனது கையில் ஏந்திய வேல் வெற்றி தருவதன்று; அவன் ஏந்திய செங்கோலே வெற்றியைத் தருவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனின் வாழ்வைக் காப்பாற்றுவது எது? ஆட்சி கோணுமல், நேர்மையாக நடாத்தும் செங்கோன் மையே ஆகும்.

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

வள்ளுவனின் இக்குறள் 'தமிழக ஆட்சி' என்ற இலக்கியத்துக்கு இலக்கணமாக அமைகின்றது.

தமிழ்நாட்டு மன்னர்கள் செங்கோலாட்சியைப் போற்றினர்; கொடுங்கோலாட்சியை வெறுத்தனர். "இந்தப் பசு தன் கன்றையிழந்து துயரமடை வதைப் போல, நானும் என் மகனை இழந்து துய ரடைவதே நீதி'' என்று முடிவுசெய்தான் மனுநீதி கண்ட சோழன். எனவே, பசுக் கன்றைக் கொன்ற தன் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்று நீதியை நிலை நாட்டினுன். செங்கோன்மையைப் பேணிய அவன், நிலையான வாழ்வைப் பெற்று, அழியாத புகழையும் பெற்றுன்.

கணவனை இழந்த கண்ணகி, பாண்டிய மன் னன் முன்னிலையிற் சென்று வழக்குரைத்தாள். உடைத்த சிலம்பிலிருந்து பறந்த மாணிக்கப் பரல் களைக் கண்டு மன்னன் பதறினுன்; தன் தவறினை உணர்ந்தான். அரசுகட்டிலிலிருந்து விழுந்து இறந்து செங்கோலாட்சியைப் பேணிக் காத்தான்.

குலசேகர பாண்டியனின் வரலாற்றில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று செங்கோன்மைக்குச் சிறந்தவோர் எடுத்துக் காட்டாகும். கடைச் சங்க காலத்திற் பாண்டி நாட்டை ஆண்ட மன்னர்களுள் இவன் தலைசிறந்தவன். இவனுடைய ஆட்சிக் காலத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. கண்ணை இமை காப்பதுபோல மக்களை மன்னன் காப்பாற்றினான்; மக்களும் மன்னனை இறைவனாகவே போற்றி வாழ்ந்தனர்.

மக்களின் நலனை நேரிற் கண்டறியவும் மக்கள் மனந் திறந்து பேசிக் கொள்வதைக் கேட்டறியவும் மன்னன் இரவு வேளையில் மாறு வேடத்தில் நாட்டைச் சுற்றி வருவான். ஒருநாள் இரவு நாட்டைச் சுற்றி வருகையில், ஒரு வீட்டிலே பெண் ஒருத்தியின் அழுகைக் குரல் கேட்டது. மாறுவேடத்திற் சென்ற மன்னன் திடீரென நின்றான்; வீட்டின் கதவருகே சென்று, மறைந்து நின்று உற்றுக் கேட்டான்.

''காசி யாத்திரை செய்யப் பலமுறை முயன்றேன்; முடியவில்லை. இம்முறை நான் எண்ணியவாறே அது கைகூடப் போகின்றது. நான் விரைவிலே திரும்பி வந்துவிடுவேன். அரசனது செங்கோல் உன்னைக் காக்கும்; கவலைப்படாதே.'' என்று கிரந்தை என்ற பெயரையுடைய மறையோன் தன் மனைவிக்குக் கூறினான்.

''என்னைத் தனியே விட்டுப் போதல் தகுமா? எனக்கு உதவியாக வீட்டில் எவரும் இல்லையே. தனியே வீட்டில் இருக்கப் போவதை எண்ணிப் பார்க்கவே பயமாக இருக்கின்றது'' என்று கூறிக் கிரந்தையின் மனைவி அழுது புலம்பினாள்.

''நமது அரசன் நீதி தவறாதவன். மன்னன் எவ்வழி, மக்களும் அவ்வழி. அவனது ஆட்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க் கெடுதலும் ஏற்படாது; தீமையும் வாராது. வேண்டியபோது அவனே வந்து உன்னைக் காப்பாற்றுவான்'' என்று மனைவிக்கு ஆறுதல் கூறினுன் கீரந்தை.

கீரந்தை கூறியவற்றைக் கதவருகே நின்று பாண்டிய மன்னன் கேட்டான். "எமது மன்னனின் ஆட்சியின் கீழ்த் தீமைக்கே இடமில்லை. அரசனுடைய காவலல்லது வேறு யாதும் குற்ற மற்ற காவலாகாது'' என்ற பொருள்படக் கீரந்தை கூறிய வார்த்தைகள் மன்னனைச் சிந்திக்க வைத்தன. மறையோனின் மனைவிக்குக் குறை எதுவும் நேரிடாதவாறு காப்பாற்றுவது தனது கடமை என்று மன்னன் எண்ணினுன்; அன்று முதல் மாறுவேடம் பூண்டு நாடோறும் இரவில் அவ்வீட்டினருகே சென்று காவல் காத்து வந்தான்.

நாட்கள் விரைந்து ஓடின. காசி யாத்திரைக்குச் சென்றிருந்த கீரந்தை, ஒரு நாட் பகல் வீடு திரும்பினுன். பல நாட்களாகக் கணவனைப் பிரிந்திருந்த மனைவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கணவனைக் கண்டபோது, அவள் கண்களிலே கண்ணீர் பெருகியது. கண்ணீரைத் துடைத்து விட்டுக் காதளவு நீண்ட அந்தக் கண்களிலே மையினைத் தீட்டினுள்; ஒளி பொருந்திய நெற்றியிலே திலகத்தையிட்டாள்; கூந்தலிலே பூவினைச் சூடினுள். அப்போது அகத்திலெழுந்த மகிழ்ச்சி அவள் முகத்திலே பொங்கி வழிந்தது. கணவனும் மனைவியும் கூடிக் குலாவி மகிழ்ந்தனர்; நள்ளிரவாகியும் அவர்களின் குதூகலங் குறையவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவும் மாறு வேடத்திற் பாண்டியன் அங்கே வந்தான். வீட்டினுள்ளே ஆடவன் ஒருவனின் குரல் கேட்டது. காசி யாத்திரையை முடித்துக்கொண்டு, பகற் பொழுதில் அல்லவா கீரந்தை வீட்டுக்கு வந்தான். ஆகவே, இரவிற் சுற்றுக் காவலுக்காக வந்த அரசன், கீரந்தையின் வரவை எப்படி அறிவான்? எனவே, "யாரோ சோர நாயகன் போலும்" என்று சந்தேகம் கொண்டான். கோபம் பொங்கி வந்தது; விரைந்து சென்று வாயிற் கதவிலே படபட என்று தட்டினான். "யார் கதவைத் தட்டுவது" என்ற குரல் அதிகார தோரணையுடன் வீட்டினுள்ளிருந்து வந்தது.

"காசி யாத்திரைக்குச் சென்றவன் திரும்பி வந்துவிட்டான். வீட்டினுள்ளே கேட்ட ஆண்மகனின் குரல் கீரந்தையினுடையதே" என்று பாண்டியன் துணிந்தான். அதே நேரத்தில் அவனுடைய உள்ளத்திலே பெருங்குழப்பம் உண்டானது; சிந்தனை உலகிற்குச் சென்றான்; "இவ்வாறு நள்ளிரவிற் கதவிலே தட்டுவது நாடோறும் நிகழ்வதுபோலும்! கணவன் இல்லாத வீட்டிலே நள்ளிரவிலே எவருங் கதவைத் தட்டுவார்களா? இவ்வாறு கதவைத் தட்டியவன் யாராக இருக்கலாம்? இவளின் கள்ளக் காதலனாகவே இருக்கவேண்டும்" என்ற சந்தேகம் அந்த மறையவனுக்கு உண்டாகப் போகின்றதே என்று பாண்டியன் எண்ணினான்; நெஞ்சம் நொந்தான்; என்ன செய்வதென்று தெரியாது வேதனைப் பட்டான்.

பாண்டிய மன்னன் எதை நினைத்தானே அது நடந்துவிட்டது. "யார் கதவைத் தட்டுவது?"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்று வினுவிய அதே நேரத்திற் கிரந்தை ஐயமுற் றுத் தன் மனைவியை நோக்கினுன். கணவனின் சந் தேகப் பார்வை அவளை வேதனைக்குள்ளாக்கியது. கணவனைப் பார்த்து, ''முன்னொரு நாள், அரசனது செங்கோல் என்னைக் காக்கும் என்று கூறி, என்னை இல்லத்திருத்திச் சென்றீர்களே? இன்று அந்த அரச வேலி இருந்தால் என்னை இடரினின்றும் காவா தோ'' என்று கூறி வருந்தினுள். அவளுரைத்தவை, பழுக்கக் காய்ச்சிய ஆணியினுற் செவியினைக் குத்து வதுபோன்று பாண்டியன் காதுகளில் விழுந்தன. அதனுல் அவன் நெஞ்சு நொந்தான்; அஞ்சி நடுங் கினுன்; அரண்மனையை நோக்கி விரைந்து நடந்தான். உடைவாளை எடுத்தான். கதவைத் தட்டிய தன் கையைத் தானே துணித்துச் செங்கோல் வளையாது பேணினுன். சிலப்பதிகாரத்திற் கட்டுரைக் காதை யிலே இந் நிகழ்ச்சியை இளங்கோவடிகள் எடுத் துரைத்துள்ளார்:

''உதவா வாழ்க்கைக் கிரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தன ளொருநாள்
அரைச வேலி யல்ல தியாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
இன்றவ் வேலி காவா தோவெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சஞ் சுடுதலி னஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை யமரர் கோமான்
உச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை
குறைத்த செங்கோற் குறையாக் கொற்றத்
திறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை.''

வாளாலே தன் கையைத் துணித்துக் கொண்ட பாண்டியன், பொன்னாற் செய்த பொய்க் கையுடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டை ஆண்டுவந்தான். அதனால் 'பொற்கைப் பாண்டியன்' என்ற பெயரைப் பெற்ருன் என்பர்.

இவ்வரலாற்றைச் சிறிது வேறுபடுத்தியும் கூறுவர்:

''நள்ளிரவிற் கதவைத் தட்டியமையாற் சந்தேகக்கண் கொண்டு, கீரந்தை மனைவியைப் பார்க்கப் போகின்ருனே'' என்று பாண்டியன் எண்ணினான். எனவே, இக்கட்டான இந்தக் கட்டத்திற் புத்திசாதுரியமாக நடந்துகொள்ள அவன் முடிவு செய்தான். சந்தேகத்திற்கு இடமளிக்காமல் மெல்லென அவ்விடத்தை விட்டு நீங்கினான். பக்கத்து வீட்டுக் கதவுகள் ஒவ்வொன்றிலும் தட்டிக் கொண்டு சென்று அரண்மனையைச் சேர்ந்தான். நள்ளிரவு அல்லவா? வீதியில் மக்கள் நடமாட்டமே இல்லாதிருந்தது; வீடுகளிலும் மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். அதனால், மறையோனுடைய வீட்டு வாயிலிலிருந்து பாண்டியன் மெல்லென மறைந்ததையும், வீட்டுக் கதவுகளிலே அவன் தட்டிக்கொண்டு சென்றதையும் எவரும் கண்டிலர்.

கீரந்தை கதவைத் திறந்தான். கதவைத் தட்டியவன் மாயமாய் மறைந்து விட்டதைக் கண்டான்; வேதனைகொண்டான். மனைவியைச் சந்தேகக்கண் கொண்டு நோக்கினான். கணவனின் பார்வை, மனைவியின் மன வேதனைக்குக் காரணமாயிற்று. மனம் மகிழ்ந்திருந்த கணவனுக்கும் மனைவிக்குமிடையில் மனப்பிளவு ஏற்பட்டது. ஒருவரையொருவர் பார்க்காமல் மனங் குழம்பிய நிலையிற் படுக்கைக்குச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியிலிருந்த ஏனைய வீடுகளிலும் குழப்பம் ஏற்பட்டது. கதவிலே தட்டிய சத்தத்தால் வீடுகளில் உறக்கத்திலிருந்தவர்கள் விழித்தெழுந்தனர். கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தனர். வீதியிற் பெரிய கூட்டம் ஒன்று கூடியது; "நள்ளிரவிலே கதவைத் தட்டியவன் யார்? என்றுமே நிகழாதது இன்று நிகழ்ந்ததே! பாண்டியன் ஆட்சியிலா இப்படி நடப்பது? இதைச் செய்தவனைக் கண்டுபிடித்துத் தண்டித்தல் வேண்டும். காலையில் மன்னனைக் கண்டு முறைகேட்போம்" என்று கூறித் தத்தம் இல்லங்களுக்கு மக்கள் சென்றனர்.

அரண்மனைக்குச் சென்ற பாண்டியன் மனங் குழம்பினான்; இங்கும் அங்கும் நடந்தான். பின்னர் படுத்துறங்கப் பள்ளியறைக்குச் சென்றான். தூக்கமின்றிப் படுக்கையிற் புரண்டு புரண்டு படுத்தான். "சிந்தித்துச் செயலாற்றத் தவறிவிட்டேனே" என்று எண்ணி எண்ணி ஏங்கினான்; வேதனை அடைந்தான். இறுதியில், தன்னை அறியாமலே உறங்கிவிட்டான்.

மறுநாட் காலையில் வழமைபோலத் தன் பரிவாரங்களுடன் பாண்டியன் அத்தாணி மண்டபத்துக்கு வந்தான். சிங்கம் சுமந்த அமளியின்மீது அமர்ந்தான். அப்போது, மக்கள் கூட்டம் ஒன்று அங்கே வந்தது. கூட்டத்தில் மறையவனும் வந்தான்; அவன் வீட்டு அயலவரும் வந்தனர். அந்த வீதியிற் குடியிருந்த மக்கள் எல்லோருமே காணப்பட்டனர். அவர்கள் பாண்டியனைப் பார்த்து, "அரசே! கடந்த இரவு எமது வீட்டுக் கதவுகளை யாரோ ஒருவன் தட்டினான். அதனால் எமது உறக்கம் கெட்டது; அமைதி குலைந்தது. நள்ளிரவில் இவ்வாறு என்றுமே நடந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவைத் தட்டிய கள்வனைக் கண்டு பிடித்துத் தக்க தண்டனை வழங்க வேண்டும்'' என்று முறையிட்டனர்.

செங்கோல் தவறுதவன் பாண்டியன். 'மக்கள் நலனே, தன்னலன்' என்ற கொள்கை உடையவன். எனவே, தான் செய்த குற்றத்தை மறைத்தானு மல்லன். அல்லது, தான் செய்த குற்றத்தைப் பிறர் மேற் சுமத்தினனும் அல்லன். குறை சொல்லி வந்த மக்களுக்கு முறைசெய்யவே முன்வந்தான். 'குடி புறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல் என்கடன்'' என்று எண்ணினன். அமைச்சர்களைப் பார்த்து, ''நள்ளிரவிற் கதவைத் தட்டியவனுக்கு விதிக்க வேண்டிய தண்டனை யாது?'' என்று கேட்டான். அதற்கு அமைச்சர்கள், ''அரசே, கதவைத் தட்டிய வனின் கையை வெட்டிவிடுதல் வேண்டும். அதுவே அரச நீதி; அதுவே செங்கோன்மை'' என்று எடுத்துரைத்தனர். அப்போது மன்னனின் முன்னே நின்ற மக்களின் முகத்திலெழுந்த மகிழ்ச்சியை எவ்வாறு சொற்களாலே வருணிப்பது!

அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட மன்னன், திடீரெனத் தனது உடைவாளை உருவினன். தன் கையைத் தானே துணிந்தான். இதனை, ''கையரிந் தான் மாறன் கதவடித்த குற்றத்தால்' என்று புலவர் ஒருவர் கூறியுள்ளார்.

தமிழ் அரசர்களின் வரலாற்றிலே பொற்கைப் பாண்டியனுடைய ஆட்சி அரச நீதிக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. புலவர்கள் பொற்கைப் பாண்டியனின் அரச நீதியை ஆங்காங்கே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடிப் போற்றினர். அவற்றிலே இரண்டு இடங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்:

பொற்கைப் பாண்டியனைப் பற்றிக் கம்பர் பாடிய செய்யுள் ஒன்று தனிப்பாடற்றிரட்டில் இடம் பெறுகின்றது; கம்பரும் அவரின் மனைவியாரும் ஒரு நாள் இரவு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். அப்போது காற்றுப் பலமாக வீசியது. வீட்டுக் கதவுகள் படபடத்தன. அந்தச் சத்தத்தைக் கேட்டு உறக்கத்திலிருந்த கம்பர் விழித்தெழுந்தார். ''யாரோ கதவைத் தட்டுகின்றார்கள்; நள்ளிரவிற் கதவைத் தட்டுபவர் யாராக இருக்கலாம்?'' என்று எண்ணினார். படுக்கையிலிருந்து எழுந்தார்; விரைந்து சென்று கதவைத் திறந்தார். கதவை மோதியது காற்றெனத் தெளிந்தார். அப்போது அவருக்குப் பொற்கைப் பாண்டியனுடைய நினைவு வந்தது.

''தென்றலே! கொற்கையை ஆட்சி செய்தான் குலசேகரன். அவன் நள்ளிரவில் ஒரு வீட்டுக் கதவைத் தட்டினான், அதற்காகத் தன் கையையே வெட்டினான். வெட்டிய அந்தக் கைக்குப் பதிலாகப் பொய்க் கை ஒன்றைப் பொன்னாற் செய்து அணிந்தான். இச்செய்தி நீ அறியாததா? தாமரை மலரின் நறுமணத்தைத் தாங்கிய தென்றலே! அழகிய வாசற் கதவைத் தட்டுவதற்கு நீ வந்த காரணம் யாது?'' என்று வினவி,

> கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்
> பொற்கையா னகதை போதாதோ—நற்கமல
> மன்றலே வாரிமணி வாசலை யசைக்கத்
> தென்றலே யேன்வந்தாய் செப்பு.

என்னும் பாடலைப் பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் 'பழமொழி நானூறு' ஒன்று. இந்த நூலிற் ''காணார் எனச் செய்யார் மாணுவினை'' என்னும் பழமொழியாற் பொற்கைப் பாண்டியன் தனது கையை வெட்டிச் செங்கோன்மையைக் காத்த வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

இக்குற்றம் செய்தது எனக்குத் தகுதியாகாது என்னும் நீதியொன்றையே பாண்டியன் கருத்திற் கொண்டான்; தன் குற்றத்துக்குத் தானே சான்றாய்த் தன் கையினை வெட்டினான். எனவே, அறிவுடையோர் பிறர் காணவில்லை என்று கருதித் தீய செயல்களைச் செய்யார்.

> எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
> தனக்குக் கரியாவான் தானாய்த் — தவற்றை
> நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும்
> எனச்செய்யார் மாணு வினை. [காணார்

# 9. சிவமணியின் திருப்பணி

திருக்கேதீச்சர ஆலயத்திலே அலங்கார உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கொழும்பு இந்துக் கல்லூரி, இந்து மாணவ மன்றத்தினர் தமது திருவிழாவை நடாத்தத் திருக்கேதீச்சரத்துக்குச் சென்றனர். அவர்களுடன் யானும் சென்றேன். சென்னையிற் படிப்பை முடித்துக்கொண்டு இலங்கைக்குத் திரும்பிய பின்னர், முதன் முதல் நான் மேற்கொண்ட தலயாத்திரை இதுவாகும்.

அலங்கார உற்சவ காலத்திலே தினமும் முற்பகலிற் கேதீச்சரப் பெருமானுக்கு அபிடேகம் நடைபெறும். பூசை முடிந்த பின்னர், மத்தியானம் அன்னதானம் நிகழும். மாலையிற் சமயச் சொற்பொழிவும், கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும் இரவு கேதீச்சரப் பெருமான் எழுந்தருளி, வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் செய்வான்.

கொழும்பு இந்துக் கல்லூரியின் திருவிழாவன்று, மாலையில் நடைபெற்ற கூட்டத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சொற்பொழிவு இடம்பெற்றது. 'கற்கோயி லும் மனக்கோயிலும்' என்பது சொற்பொழிவின் தலைப்பு. ஆலய வாயிலிலே கூட்டம் நடைபெற் றது. சேர். கந்தையா வைத்தியநாதன் கூட்டத் திற்குத் தலைமை தாங்கினர். புனிதமான சூழ லிலே புழுதி மண்ணின் மேல் அடியார்கள் அமை தியாக அமர்ந்திருந்தனர். தலைவர் எழுந்து நின்று, சபையிலே அமர்ந்திருந்தவர்களுக்கு என்னை அறி முகம் செய்து வைத்தார். சென்னையிலிருந்து திரும்பிய பின்னர், எனது முதற் சொற்பொழிவு, கேதீச்சரப் பெருமானின் ஆலயத்திலே இடம் பெற்றது.

பெரிய புராணத்தை ஆதாரமாகக்கொண்டு பூசலாரின் வரலாற்றை எளிய தமிழில் விரிவாக எடுத்துச் சொன்னேன். காடவர்கோனின் கற் கோயிலையும் பூசலாரின் மனக்கோயிலையும் முறையே மலைக்கும் மடுவுக்கும் ஒப்பிட்டுக் காட்டி விளக்கினேன். எனினும், ''கற்கோயிலை இறைவன் விரும்பாது மனக்கோயிலையே விரும்பினன். அத ஞல், மனக்கோயிற் குடமுழுக்கு உரிய நாளில் நடந்தது; மற்றையதன் குடமுழுக்குப் பின் போடப்பட்டது'' என்றும், ''ஆடம்பரமான கற் கோயிலிலும் பார்க்கப் புனிதமான மனக்கோயில் மேலானது; சிறந்தது என்றும் எடுத்துச் சொல்லிய பின்னர், சேர். கந்தையா வைத்தியநாதன் அவர் களைப் பார்த்தேன். எனது சொற்பொழிவினைக் கேட்டு அவர் மகிழ்ந்து கொண்டிருப்பாரென எதிர்பார்த்தேன். ஆனல், நான் எதிர்பார்த்தது போல அவர் முகத்திலே மகிழ்ச்சிக் குறி தென்பட வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிச் சபைத் தலைவரான நாளிலிருந்து, திருக்கேதீச்சரத் திருப்பணிக்காகவே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் சேர். கந்தையா வைத்தியநாதன் அர்ப்பணித்து வந்தார். நாவலர் பெருமானின் நினைவு நிறைவேற வேண்டுமென எண்ணினார்; அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தார். தேவார காலத் திருக்கேதீச்சரத்தைக் காணவேண்டுமெனக் கற்பனை செய்தார். சுருக்க மாகக் கூறின், வண்டுகளின் இன்னிசைக்கு மாமயில் நடமாடும் மாதோட்டத்தில், கற்கோயில் ஒன்றைக் காண்பதற்கு அவர் உள்ளம் விழைந்து கொண்டிருந்தது. கற்பனையிற் கற்கோயிலையே கண்டுகொண்டிருந்த ஒருவருக்கு, மனக்கோயிலே மேலானது என்று நான் கூறியது எவ்வாறு மகிழ்ச் சியை ஏற்படுத்தியிருக்கும்? எவரையும் பாராது நிலத்தையே பார்த்தவண்ணம் அவர் இருந்தார். பேச்சை எவ்வாறு முடிக்கப்போகின்றேன் என்று எண்ணி அவ்வாறு அவர் இருந்தார் போலும்! மகிழ்ச்சி இல்லாமல் இருக்கின்றாரே என்று எண்ணி நான் கவலைப்படவில்லை; தொடர்ந்து பேசினேன்.

"காடவர்கோன் காலத்தில் வாழ்ந்தவர் பூச லார். ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் மனத் தினர். அகத் தூய்மை உள்ளவர். அந்தத் தூய் மையான உள்ளத்திலே மனக்கோயில் எழுந்தது.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

தூய்மையான உள்ளமே அறத்தின் இருப்பிடம். அந்த உள்ளத்திலேதான் இறைவன் குடிகொள் கின்றான். ஆடம்பரத்தையும் ஆணவத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் வெறுப்பவன்; அமைதியையும் அகத் தூய்மையையும் விரும்புபவன். எனவே, பூசலா ரின் தூய்மையான உள்ளத்திலெழுந்த மனக்கோ யிலை இறைவன் விரும்பியதில் வியப்பில்லையே! கற்கோயிலிலும் பார்க்க மனக்கோயில் அவனின் உள்ளத்துக்கு உகந்ததாயிற்று!

பூசலார் போன்ற தூய்மையான உள்ளம் உடைய மக்கள் இன்று எத்தனைபேர் வாழ்கின் றனர். பூசலாரின் உயர்ந்த உள்ளம் போல எத் தனைபேர் வளர்ந்த உள்ளம் படைத்தவர்களாக வாழ்கின்றனர்? பூசலாரின் உள்ளம் உயர்ந்த அளவிற்கு எமது உள்ளம் வளரவில்லை; வளர வும் முடியாது. எனவே, பூசலார் போன்றவர் களுக்குக் கற்கோயில் வேண்டியதில்லை; மனக்கோ யிலே போதும். ஆனல், எம் போன்றோர்க்கு மனக்கோயில் எந்த அளவிற்குப் பயன்படும்? எவ் வளவிற்கும் பயன்படாது. மாசு நிறைந்த மனத் தோடு, துன்பம் மிக்க வாழ்வை வாழ்கின்ற நமக்கு மனக்கோயில் என்றும் அமைதியை அளிக் காது. கற்கோயில் ஒன்றுதான் அமைதியைக் கொடுக்கும். எனவே, மனக்கோயில் கட்டுவதை விடுத்து, நாம் கற்கோயிலைக் கட்டவேண்டியவர் களாக இருக்கின்றோம்'' என்று கற்கோயிலின் இன்றியமையாமையை வலியுறுத்திய பின்னர் மேலும் தொடர்ந்து பேசினேன்:

''தேவார காலத்திலே மாதோட்டம் நீர் வளமும் நிலவளமும் உடையதாய் விளங்கியது. அங்கே மாமரங்களும், கமுகுகளும், வாழைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி வளர்ந்து காட்சி கொடுத்தன. "கனை கடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்" என்றும், "மாவும் பூகமுங் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்" என்றும் ஞானசம்பந்தர் பாடிப் புகழ்ந்தார். இன்னும், மாதோட்டம் திருவுறையும் பொன்னகராகத் திகழ்ந்தது. முத்துகளும் வலம்புரிச் சங்குகளும் அங்கே மலிந்து கிடந்தன. பரந்து நீண்ட ஆற்றுப் படுக்கையைப் பாலாவி கொண்டிருந்தது. அதிலே தீர்த்தமாடியவர்களின் பாவம் நீங்கியது; பிணி அறுந்தது." என்று மாதோட்டத்தின் பண்டைப் பெருமையையும் பாவம், வினை அறுப்பார் பயில் பாலாவியின் பண்பையும் திருக்கேதீச்சரப் பதிகங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்கினேன். பின்னர்,

"மாதோட்டத்தின் மத்தியிலே கேதீச்சரத்து இறைவன் கோயில் கொண்டிருந்தான். அவன் மத்தும் மத யானையுரி போர்த்த மணவாளனாக விளங்கினான். இவ்வாறு தேவார காலத்திலே எழில் மிகுந்து திகழ்ந்த புனித நகரமும், இறைவன் எழுந்தருளியிருந்த வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கோயிலும் சீரழிந்தன. அவற்றைப் புனருத்தாரணம் செய்யும் நற்பணியைச் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் மேற்கொண்டுள்ளார். சைவப் பெருமக்களாகிய நாம், தேவார காலத் திருக்கேதீச்சரத்தைக் காணவேண்டும். எனவே, அவர் மேற்கொண்ட நற்பணி இனிது நிறைவேறப் பொன்னும் பொருளும் வாரி வழங்குவோம்; உள்ளத்தாலும் உடலாலும் உறுதுணையாய் இருப்போம். எமக்கு வேண்டியது கற்கோயிலே; பூசலார் கட்டிய மனக்கோயிலன்று."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி முடித்தேன். நிலத்தையே பார்த்துக் கொண்டிருந்த சேர். கந்தையா வைத்திய நாதன் புன்முறுவலோடு தலை நிமிர்ந்து பார்த்தார்.

இதன் பின்னர், சேர். கந்தையா வைத்திய நாதன் அவர்களோடு நெருங்கிப் பழகுகின்ற நல் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரோடு சேர்ந்து திருக்கேதீச்சரப் புனருத்தாரண வேலைக ளிற் பங்குகொண்டு உழைத்தேன். கேதீச்சரத்துக் குத் தாம் போகும் போது, என்னையும் அழைத்துச் செல்வார். பிரயாணம் செய்யும்போது, கேதீச் சரப் பதிகங்களைப் பண்ணோடு பாடுமாறு கேட் பார்; சிவபுராணத்தை இசையோடு பாடுமாறு பணிப்பார். இறைவன் புகழைப் பாடுவதைக் கேட்டு அவரின் உள்ளம் பேருவகை கொள்ளும்.

மக்கள் உலகிலே தோன்றி மறைகின்றனர். தோற்றமும் ஒடுக்கமுமாகவே அவர்களின் வாழ்க்கை அமைந்துவிடுகின்றது. மனித வாழ்வு நீரிலிட்ட கோடு போன்றது; புல் நுனிமேல் நீர் போன்றது. குறுகிய காலத்திலே அழியாத புகழை யும் நிலையான வாழ்வையும் பெற்றவர்கள் எத் தனை பேர்? சிலரே.

உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே,

என்று புறநானூற்றுப் புலவர் ஒருவர் கூறிப் போந்தார்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளோடு வாழ்ந்தவர் சேர். கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியநாதன் அவர்கள், எனவே, அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பின்பும், பிறந்த பொன் ஞட்டிற்குச் சேவை செய்வதையே தமது பெரும் பணியாகக் கொண்டார். நாவலர் கழகத்தின் அதிபராக அமர்ந்தும், இந்துக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைமையை ஏற்றும் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டினர். அகில இலங்கை இந்து மா மன்றம், திருக்கேதீச்சரப் புன ருத்தாரண சபை ஆகியவற்றின் தலைவராயிருந்து சமய வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். அத ஞல், தமிழ் வளர்ந்தது; சமயம் தளைத்தது.

''என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே''

என்ற திருமூலர் கொள்கைக்கு அமைய அவர் வாழ்வும் அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. கண்களே பேசும் வாய்திறந்தே

பருவ மங்கையர் இருவர்; இருவரும் நெருங்கிப் பழகும் நண்பர்கள், தமது உள்ளத்திலே உள்ளவற்றை மறைக்காமலே ஒருவருக்கொருவர் எடுத்துச் சொல்லி உறவாடும் உற்ற நண்பர்கள்; கெழுமிய நட்புடையவர்கள். ஒருவள் தலைவி; மற்றவள் தோழி.

அழகிய நந்தவனத்திலே சிறிய சுனை ஒன்றின் அருகே இருவரும் அமர்ந்திருந்தனர். மாலை நேரம். அப்போது பழைய சம்பவம் ஒன்று தலைவியின் நினைவுக்கு வந்தது; அதனைத் தனது தோழிக்கு எடுத்துச் சொல்லத் தொடங்கினாள்.

தோழி, யான் சிறுமியாக இருந்தபோது எனது வீட்டிற்குப் பக்கத்திலுள்ள வீடுகளிலும் எனது வயதையுடைய சிறுமியர் பலர் இருந்தனர். யாம் எல்லோரும் சேர்ந்து விளையாடுவோம். தெருவோரத்தில், மாலை நேரத்தில், மணல்வீடு கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையறம் நடாத்திய பழைய நினைவுகள் இன்றும் என் கண்முன்னே நிற்கின்றன. அவற்றை நினைத்து நினைத்து நான் மகிழ்வதுண்டு. அவற்றுள் ஒரு சம்பவம் மறக்கவே முடியாதது.

ஒரு நாள் நானும் எனது தோழியரும் தெருவோரத்தில் மணல்வீடு கட்டி விளையாடிக்கொண்டிருந்தோம். அப்போது அடுத்த வீட்டுப் பையன் அங்கே வந்தான். சிறிது நேரம் அங்கே நின்று, மணல் வீடு கட்டி நாம் விளையாடி மகிழ்வதைப் பார்த்த வண்ணம் நின்றான். திடீரெனச் சிறிய மணல் வீட்டைக் காலாற் சிதைத்தான். நாம் எழுந்து அவனைத் தடுத்தோம். அவன் எனது தலைமயிரைப் பிடித்து இழுத்தான்; விளையாடும் பந்தைத் தூக்கி எறிந்தான். நாம் அவனைத் துரத்தினோம். அவன் ஓடினான். அவனைத் தொடர்ந்து துரத்தினோம். அவன் ஓடி மறைந்து விட்டான்.

அடுத்த நாளும் அவன் அங்கே வந்தான். முதல் நாள் எவற்றைச் செய்தானோ அவற்றையே அவன் அன்றும் செய்தான். விளையாடி மகிழ்வதைக் குழப்புவதால், நாம் துன்பப்படுவதில் அவன் இன்பங் கண்டான். குறும்பு நிறைந்தவன். அன்று அவன் செய்த குறும்புகள் இன்றும் என் நினைவில் அப்படியே நிற்கின்றன. இவை நாம் சிறுவர்களாக இருந்தபோது நிகழ்ந்தவை.

யான் வளர்ந்து பருவ மங்கையானேன். வீட்டில் அம்மாவுக்கு உதவிகள் செய்துகொண்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன். ஒரு நாள் அவன் அங்கே வந்தான். வீட்டுக் கதவிலே தட்டினன்.

''வீட்டில் யாராவது இருக்கின்றீர்களா? தாகமாக இருக்கின்றது. தாகந் தீர்க்கத் தண்ணீர் வேண்டும்'' என்ற குரல் சமையல் அறையிலே சமைத்துக் கொண்டிருந்த அம்மாவிற்கும் எனக்கும் கேட்டது.

''தாகத்தோடு யாரோ ஒருவன் வந்து நிற்கின்ருன். குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கிருன். மகளே! பொற் செம்பிலே தண்ணீர் எடுத்துச் சென்று அவனுடைய தாகத்தைத் தீர்த்து வா''.

''அடர் பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்! உண்ணு நீர் ஊட்டி வா''. என்ருள்.

அம்மா சொன்னபடியே, தண்ணீரைச் செம்பிலே எடுத்துக்கொண்டு சென்றேன். அங்கு வந்திருப்பவன் யாரென்று அறியாமலே சென்றேன். சென்ற எனக்கு வியப்பு ஏற்பட்டது. அங்கே, விளையாட்டுப் பருவத்திலே குறும்பு செய்தவன் நிற்கக் கண்டேன். அவன் என்னைப் பார்த்தான்; நானும் அவனைப் பார்த்தேன். இருவரின் கண்களும் சந்தித்தன. அப்போது எனது வளையல்கள் அணிந்த கையை அவன் பற்றி இழுத்துக் குறும்பு செய்தான். அவன் கையைப் பிடித்து இழுத்துக் குறும்பு செய்ததை நான் மனமார விரும்பினேன். இன்னும் கையைப் பிடிக்கமாட்டான என்று எண்ணினேன். ஆனல், பருவ மங்கை அல்லவா? என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வது என்று தெரியாது திகைத்தேன். பற்றிய கையைப் பறிக்க முயன்றேன். அவன் விடாமலே என்னை இழுத்தான்.

''அம்மா! இங்கே ஓடிவா. இங்கே வந்து இவனைப் பார்.'' என்று குரலெழுப்பினேன்.

சமையல் அறையிலே இருந்த அம்மாவிற்கு எனது அவலக் குரல் கேட்டது. அவசர அவசரமாக எழுந்து அலறிக் கொண்டு ஓடோடி வந்தாள். என் மகளுக்கு ஏதோ நடந்து விட்டது என்ற பயத்தோடு அங்கே வந்தாள். தண்ணீர்ச் செம்புடன் காளை ஒருவன் கலங்கி நிற்பதையுங் கண்டாள்.

''மகளே! ஏன் அலறினாய்? என்ன நடந்தது? இவன் ஏதாவது தகாத முறையிலே நடந்துகொண்டானா?'' என்று கேட்டாள்.

அப்போது அங்கே நின்றவனைப் பார்த்தேன். அவன் அகத்திலே இருந்த அச்சம் முகத்திலே தெரிந்தது. அவன் உடல் நடுங்கியது; கண்கள் பிதுங்கின. எதைச் சொல்லப் போகின்றாளோ என்று எண்ணியெண்ணி அவன் ஏங்கினான் போலும்!

''அம்மா! அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. தாகத்தோடு வந்த இவனுக்குத் தாகத்தைத் தணிக்கச் செம்பைக் கொடுத்தேன். அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கித் தண்ணீரைப் பருகினான்: பருகும்போது தண்ணீர் விக்கிவிட்டது'' என்று கூறி அவனைப் பார்த்தேன். அவன் என்னைப் பார்த்தான். நான் நிலத்தைப் பார்த்தேன்.

நிகழாததொன்றைச் சொல்லி, நிகழ்ந்ததை மறைத்த எனது சாதுரியத்தை அம்மா எப்படி அறிவாள். நான் சொன்னவை உண்மை என்றே அவள் நம்பினாள். அம்மாவின் அவலமான முகத்திலே அன்புக் குறி தோன்றியது. செம்பிலிருந்த தண்ணீரை அவன் குடித்தான். அன்னையும் தன்னைப் புறம்பழித்து நீவி அவனுக்கு விக்கல் ஏற்படாமல் தடுத்தாள.

தோழி இந்தக் கட்டத்திலே நிகழ்ந்ததை எவ்வாறு சொல்லுவேன்? விக்கல் வராமல் அம்மா தடவியபோது, அவன் என்னைக் கடைக்கண்ணாற் பார்த்தான். ''பெற்றெடுத்த தாய்க்கே உண்மையை மறைத்து விட்டாயே, அவ்வாறு நீ செய்தமை என்மீது நீ கொண்டுள்ள கட்டுக்கடங்காக் காதலையே காட்டுகின்றது.'' என்று சொல்லுவான்போல அவன் கண்கள் என்னை நோக்கின; நானும் அவனை நோக்கினேன். ''கண்களே பேசும் வாய் திறந்தே'' என்று நான் முன்னர் ஒருபோது படித்ததை, அன்று அனுபவத்திற் கண்டேன். கொலைஞனைப் போல என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். அவன் ஒரு கள்வன்; என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்த் தொடீஇ கேளாய் தெருவினும் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
"அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள்" எனயானும்
தன்னை அறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற்றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போ னோக்கி நகைக் கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

* * *

விவேக சிந்தாமணியிலே தலைவியின் கண்களைக் கொண்டை மீன்களுக்கு ஒப்பிட்டு வருணித்துள்ள முறை நகைச் சுவையோடு சேர்ந்தது. தாமரைப் பொய்கை ஒன்றிலே இறங்கினாள் தலைவி ஒருத்தி. பொய்கையிலே தாமரைப் பூக்கள் மலர்ந்து காட்சி கொடுத்தன. கெண்டை மீன்கள் தண்ணீரிலே இங்கும் அங்கும் ஓடித் திரிந்தன. தண்ணீரிலே இறங்கிய அந்த நங்கை, இரண்டு கைகளாலும் நீரை அள்ளினாள். தெளிந்த நீர் கைகள் நிறைய நின்றன. இரண்டு கைகளிலு இருந்த அந்த நீரைத் தன்முகத்துக்குக் கிட்டக் கொண்டு சென்றாள்; நீருள் உற்று நோக்கினாள். அங்கே இரண்டு கெண்டை மீன்கள் இருக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாள். தன் கண்களின் நிழலே கெண்டை மீன்களாக அவள் கண்களுக்குத் தெரிந்தன என்பதை அவள் அறியாள்!

கையில் ஏந்திய நீரோடு, ''கெண்டை!, கெண்டை!!'', என்று கூவிக் கொண்டே கரைக்கு வந்தாள். கரையேறிய அவள் தன் கையில் நின்ற நீரிலே கெண்டை மீனைக் காணுமல் தயங்கிஞள்.

கண்களைக் கெண்டை மீன்களுக்கு ஒப்பிட்டுக் புலவர்கள் பாடுவர். கெண்டை மீனின் வடிவமும், அதன் நிறமும், பிறழ்ச்சியும் பெண்களின் கண்களுக்கு உவமையாகக் கூறக் காரணமாயின. ஆனல், விவேக சிந்தாமணியில் அந்த உவமையைப் புலவர் வருணித்துள்ள முறை நயந்து நயந்து இன்புறக் கூடியதாகும்.

தண்டு வாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகத்தரு அகத்திஞள்
கெண்டை கெண்டையென் றக்கரை ஏறிஞள்
கெண்டை காண்கிலள், நின்று தயங்கிஞள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. உள்ளத்தனையது உயர்வு

மருத நிலத்திலே பொய்கை ஒன்று; அது நீரின்றி வரண்டு இருந்தது. அங்கே தாமரை மலர்களும் அல்லிப்பூக்களும் காணப்பட்டன. அவைகளிலே சில இதழ்களை விரித்து நின்றன; வேறு சில மொட்டுகளாகக் காணப்பட்டன. பொய்கைக் கரையோரமாகச் சில நாரைகள் ஓடு மீன் ஓடி உறுமீன் வரும்வரை வாடியிருந்தன. அங்கே ஓங்கி வளர்ந்து நின்ற மருதமரத்திலே மீன்கொத்திப் பறவைகள் அமர்ந்திருந்தன. மழை வளங் குன்றின் மக்கள் வளங் குன்றும். மரங்கள் இலைகளை உதிர்த்து நிற்கும்; விலங்குகள் வாடிவதங் கும்; பறவைகள் இரை தேடிப் பறந்து திரியும். இவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அந்தப் பொய்கை காட்சி கொடுத்தது.

நீண்டகால வரட்சிக்குப் பின், ஒரு நாள் வானத்திலே கருமுகில்கள் திரண்டன. அப்போது மயில்கள் தோகைகளை விரித்து ஆடின. குயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கூவுவதை மறந்து வாடியிருந்தன. பறவைகள் அங்கும் இங்கும் பறந்தன. வானம் இருண்டது. குளிர்காற்று வீசியது. மழை சோ எனப் பொழிந்தது.

வற்றி வரண்டு காணப்பட்ட பொய்கையிலே கொஞ்சங் கொஞ்சமாக நீர் நிறையத் தொடங்கியது.மழை விடாமலே தொடர்ந்து பெய்தது.பொய்கையிலே நீரும் நிறைந்தது. காலையிலே பெய்யத் தொடங்கிய மழை மாலைவரை தொடர்ந்து பெய்தது. பொய்கையிலே இருந்த தாமரைப் பூக்களும் அல்லி மலர்களும் மழை பொழிந்ததால் மனம் மகிழ்ந்தன போலும்! பொய்கையிலே நீர் நிறைய நிறைய மலர்களின் தண்டுகளும் நீண்டு நீண்டு வளர்ந்தன. பூக்களும் மொட்டுகளும் நீருக்கு மேலேதலை நிமிர்ந்து நின்றன.

மாலையிலும் மழை நிற்கவில்லை; காலைவரை தொடர்ந்து பெய்தது. கடும் மழையால் பொய்கை நிறைந்து நீர் வழிந்தோடியது. பொய்கையிலே நீர் நிறைந்ததால் தாமரைமலர்களும் அல்லிப்பூக்களும் நீரிலேமூழ்கினவா?இல்லை.பொய்கையிலே மேலுக்கு மேலுக்கு நீர்உயர்ந்துகொண்டு செல்ல,அந்த மலர்களின் தண்டுகளும் வளர்ந்து வளர்ந்து மேலுக்கு மேலுக்கு வந்தன.இரவு முழுவதும் வளர்ந்து வளர்ந்து காலையிலே தண்ணீருக்குமேலே அவை தலையை நிமிர்த்தி இறுமாப்போடு நின்றன. ''வெள்ளத்தனையது மலர் நீட்டம்'' என்பது வள்ளுவர் பொய்யாமொழி. வெள்ளத்தின் அளவுக்கேற்ப மலர் நீட்டமும் அமைந்தது. வெள்ளம் குறைந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் நீட்டமும் குறைவாக இருந்தது. வெள்ளம் கூடியபோது, மலர் நீட்டமும் கூடியது.

மலர் நீட்டம் போன்றது மனித வாழ்க்கையும். வாழ்க்கையிற் சிலர் உயர்ந்துகொண்டே செல்கின்றனர். சிலர் வாழ்க்கையிலே உயர்ந்து சென்று தாழ்ந்துவிடுகின்றனர். சிலரைப் புகழ் தேடி வருகின்றது; சிலர் புகழைத் தேடி அலைகின்றனர். சிலர் நல்லவர்களாக வாழ்ந்து, நல்லவர்களாகவே இறக்கின்றனர்; சிலர் நல்லவர்களாகவே வாழ்ந்து இறுதியிலே கெட்டவர்களாக மடிகின்றனர்.

மலர் நீட்டம் போன்ற மனித வாழ்வைப் பெறுவது எங்ஙனம்? உள்ளத்தைப் பொறுத்ததே உயர்வும். உள்ளத்திலே நல்ல எண்ணங்கள் உருவாக வேண்டும். பிறருக்குத் தீமை கருதாத உள்ளம் படைத்தவர்களாக வாழவேண்டும். தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்கின்ற பண்புள்ளம் வளர வேண்டும்.

இப் பண்புகளோடு உள்ளத்திலே ஊக்கம் வேண்டும். அந்த ஊக்கமும் மற்றையவரின் உயர்வைக் கெடுக்காததாக இருத்தல் அவசியம். ஊக்கம் உயர்ச்சிக்கு உறுதுணையாக அமையலாம்; மற்றவர்களின் கெடுதலுக்குக் காரணமாக இருத்தலாகாது. ஊக்கத்தின் அளவினதே வாழ்க்கையின் வளமுமாகும்.

மலர் நீட்டத்தைப் போலவே, உள்ளத்தில் ஊக்கமும் அமையவேண்டும். வெள்ளம் உயரவுயர மலரும் நீண்டு நீண்டு வளர்கின்றது. பொய்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழத்தைப் பொறுத்துமலரின் நீட்டமும் அமைந்து விடுகின்றது. உள்ளத்தின் ஊக்கத்தைப் பொறுத்து மனித வாழ்வும் உயர்ந்துவிடுகின்றது. நீர்ப் பூக்களின் தண்டின் நீளம் நின்றநீரின் அளவினதாகும். அதேபோன்று மனிதர்க்கு ஊக்கத்தின் அளவினதாகவே அவர்களின் உயர்ச்சியும் இருக்கும்.

வெள்ளத் தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

புதுப் பானையிலே பாலைவிட்டுப் பொங்குகின்றோம். அந்தப் பால் சூடு ஏறியதும்மேல் நோக்கிச் செல்கின்றது.மேல் நோக்கிச் சென்ற பால்பொங்கி வழிகின்றது. இது மனித இனத்துக்குக் கற்றுக் கொடுப்பது என்ன? பால் வெள்ளை நிறம் உடையது.அதேபோல மனிதனுடைய உள்ளமும்வெள்ளை உள்ளம் உள்ளதாக வளரவேண்டும். பானையிலுள்ள வெண்மையான பால், உயர்ந்து செல்வதுபோல மனிதனுடைய வெள்ளை உள்ளத்திலே எழுகின்ற எண்ணங்களும் உயர்ந்தவையாக இருத்தல்வேண்டும். அனைத்தையும் உயர்வாகவே நினைத்தல்வேண்டும். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்றான் வள்ளுவன்.

உயர்ந்து சென்ற பால், பொங்கிவழிகின்றது. அப்போது பொங்குவோனுடைய உள்ளத்திலும் உவகை பொங்கி வழிகின்றது. அதேபோல உலகம் முழுவதும் இன்பம் பொங்கி வழியவேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் மனிதனுக்கு வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலனைக் கருதாது நாட்டின் நலனையே கருதி வாழ்பவர் உள்ளத்தால் உயர்ந்தவர்களாவர். தமக்கென வாழாத பிறர்க்குரியவர்களாக அவர்களின் வாழ்க்கை அமைந்து மிளிரும். மக்கள் உள்ளத்திலே நிலையான இடத்தைப் பெற்று, அழியாத புகழோடு நிலையான வாழ்வையும் பெறுவர்.

Those who dedicate their lives for the common good of the country without considering their own selfish interests are of sublime calibre. Their greatness is measured by; the nobility of their soul.

"With rising flood the rising lotus flower its stem unwinds;
The dignity of men is measured by their minds."

The lotus in the tank, with its long, flexible, winding stem is always on the surface, rising or falling with the depth of the water, unaffected by any vicissitude. So 'Man is man and master of his fate.'

Robinson's is neat:

'The water's depth the lily's length;
The height of man's his mental strength.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியர்....

- இந்திய நூலாசிரியர் வரலாற்றில், டாக்டர் 'மு. வ.'வுக்கு ஒரு தனி இடம். அன்ஞரின் ஈழத்து வாரிசு கலாநிதி ஆ. கந்தையா அவர்கள். சொல் நயமும் பொருள் நயமும் மிக்க நூல்களை எழுதி வருகின்றார். தமது உள்ளத்துயர்வால், திருக்கோவை யாரில்— 'திருவளர் தாமரை' போல் வளர்கின்றார்.

- இலண்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் 'ஜாண்மார்' அவர்களின் வழிகாட்டலில் வளர்ந்து 'பக்தி இலக்கிய' ஆய்வில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

- இவர் இயற்றிய 'திருக்கேதீஸ்வரம்', 'மலரும் மணமும்' என்னும் நூல்கள் தமிழ் மணம் கமழ்பவை. மலரும் மணமும் திருப்பதி வெங்கடேஸ்வரப் பல்கலைக் கழகத்தில் பாட நூலாய்ப் புகழ் பெற்றது.

- 1978—1980ஆம் ஆண்டுகளில் களனிப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைமைப் பதவியை அலங்கரித்தவர்.

- கல்விச்சேவை ஆணைக்குழு, பாட நூல் ஆலோசனைக்குழு, என்பவற்றில் கௌரவம் மிக்க பதவிகளை வகிக்கின்றார்.

- திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின், மானிடவியல்—சமூகவியற் சிரேட்ட விரிவுரையாளராயும் பணிபுரிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org